விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 09 வள்ளுவர் ஆண்டு 2039 பங்குனி 18 திங்கட்கிழமை (31.03.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 103




# விடுதலைப்புலிகளுடன் இணைந்தாவது கிழக்கில் வெற்றிபெற ஐ.தே.க முயற்சி



## ஜனாதிபதி குற்றச்சாட்டு

(கொழும்பு)

கிழக்கில் உள்ளூராட்சி சபைத் தேர்தலைப் புறக்கணித்த ஐக்கிய தேசியக் கட்சி விடுதலைப்புலிகளுடன் இணைந்தாவது கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் வெற்றியீட்டுவதற்கு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. புலிகளிடமிருந்து கிழக்கு மீட்கப்பட்டு அங்கு ஜனநாயகம் ஏற்படுத்தப்பட்டிருப்பதை அந்த மக்கள் மறந்திருக்க மாட்டார்கள் என்று ஜனாதிபதியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# சர்வகட்சிக் குழுவின் நடவடிக்கைக்கு சு.கட்சியின் மாநாட்டில் அங்கீகாரம்

## ஏனைய ஆறு யோசனைகளும் நிறைவேற்றம்

(கொழும்பு)

ஜனாதிபதியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மகிந்த ராஜபக்ஷ தலைமையில் அலரிமாளிகையில் நடைபெற்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 18-வது மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட 7 யோசனைகளுக்கும் ஏகமனதாக அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்ட யோசனைகள் வருமாறு,

❖ இருபது வருடங்களுக்கு மேலாக நாட்டில் நிலவுகின்ற பயங்கரவாதத்தைத் தோற்கடித்து அதிகாரத்தைப் பகிர்ந்து சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் சமாதானமாக வாழக் கூடிய நிலைமையினை தோற்றுவிப்பதற்காக சர்வ கட்சி ஆலோசனைக் குழுவின் நடவடிக்கைகளுக்குப் பூரண ஆதரவை வழங்குதல்.

❖ பயங்கரவாதத்தைத் தோற்கடிப்பதற்காக அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படுகின்ற நடவடிக்கைகளுக்கு சர்வதேச சமூகத்தினால் நிபந்தனையின்றி வழங்கப்படுகின்ற ஆதரவிற்கு மாநாட்டில் கௌரவம் அளிக்கப்பட்டதுடன் அந்த

(02 ஆம் பக்கம் பார்க்க)

## இராமேஸ்வரம் மீனவர் மீது இலங்கைக் கடற்படை சூடு

(சென்னை)

நடுக்கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த இராமேஸ்வரம் மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படை நேற்று அதிகாலை திடீரென துப்பாக்கிச் சூடு நடத்தியதில் மீனவரின் படகு சேதமடைந்ததாகத் தமிழகச் செய்திகள் தெரிவித்தன.

இராமேஸ்வரத்திலிருந்து சனிக்கிழமை 669 விசைப்படகுகளில் மீனவர்கள் மீன்துறை அனுமதி பெற்றுக் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றுள்ளனர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## சிங்கப்பூருக்கு 25 டொலர் யாழ்ப்பாணத்துக்கு 75 டொலர்

### பிரதம நீதியரசர் தெரிவிப்பு

(கொழும்பு)

யாழ்.குடாநாட்டிற்குப் பொருள்களைக் கொண்டு செல்வதில் ஏற்பட்டுள்ள சிக்கல் நிலைமையே அவற்றின் விலை பாரியளவில் அதிகரிப்பதற்குக் காரணம் என பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா தெரிவித்துள்ளார்.

வத்தளைப் பல நோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் சுயதொழில்சேவை நிலைய திறப்பு விழா நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தான் யாழ்ப்பாணத்திற்கு வந்தபோது ஏனைய இடங்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியத் தூதரக இராணுவ அதிகாரி யாழ்.முன்னரங்க பகுதிகளுக்கு விஜயம்

(கொழும்பு)

இலங்கையிலுள்ள இந்தியத் தூதரகத்தின் படைத்துறைப் பிரிவு அதிகாரியான கப்டன் பிரதீப் சிங், யாழ்.குடாநாட்டிற்கு மூன்று நாள் பயணம் செய்து அங்குள்ள படையினரின் முன்னரங்க நிலைகளைப் பார்வையிட்டதாக கொழும்பிலிருந்து வெளிவரும் லக்பிம வார ஏடு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்த ஏட்டின் பாதுகாப்பு பத்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வன்னியில் பெய்து வரும் கடும் மழை காரணமாக மோதல்கள் தணிந்துள்ளன. கடந்த இரு வாரங்களாக பெய்து வரும் கடும் மழை காரணமாக தாழ்வான நிலப்பகுதிகள் வெள்ளத்தால் நிறைந்துள்ளதனால் எல்லோரும் உயர்வான நிலப்பகுதியை நோக்கி நகரவேண்டிய நிலை தோன்றியுள்ளது.

படையினரும் விடுதலைப் புலிகளும் பாதகமான காலநிலைக்கு ஒத்துழைக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

(02 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ் ஜனநாயகக் கூட்டமைப்பு போட்டி

(கொழும்பு)

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ்.(பத்மநாபா) ஆகிய கட்சிகள் தமிழ் ஜனநாயகக் கூட்டமைப்பாகப் போட்டியிடவுள்ளதாகப் புளொட் அமைப்பின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

இந்தத் தமிழ் ஜனநாயகக் கூட்டமைப்பு, அரசியல் கட்சியாக பதிவு செய்யப்படவுள்ளதாகவும் மட்டக்களப்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

மாகாண சபை,வடக்குக் கிழக்கு எனப் பிரிக்கப்பட்ட போதும் கிழக்கு மாகாண சபைக்கு தமிழர் ஒருவரே முதலமைச்சராக வரவேண்டும் என்பது ஒரு சரியான முடிபு என்று அவர் கூறியுள்ளார்.

தமிழ் மக்களின் போராட்டத்தால் உருவாக்கப்பட்ட மாகாணசபை முஸ்லிம் மக்கள் தமிழ் பேசும் சமுதாயமாக இருந்தபோதும் இங்கு முதன்முதலாக இடம்பெறும் கிழக்கு மாகாண் சபைத் தேர்தலில் ஒரு தமிழ் முதலமைச்சர் வருவதன் மூலந்தான் தமிழ் மக்களின் மத்தியில் ஒரு நம்பிக்கை

(10 ஆம் பக்கம் பார்க்க)

# முல்லைத்தீவில் மூழ்கடிக்கப்பட்ட டோறா நீர்மூழ்கி மூலம் தாக்கப்பட்டுள்ளது?

## கடற்படை வட்டாரங்களில் அதிர்ச்சி

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் கடற்கரும்புலிகளால் முல்லைத்தீவு நாயாறு கடற்பகுதியில் கடந்த வாரம் மூழ்கடிக்கப்பட்ட டோறாப் படகு, நீர்மூழ்கிக் கப்பல் அல்லது அலையுடன் பயணிக்கும் கலம் மூலம் தகர்க்கப்பட்டிருக்கலாம் என்று கடற்படையின் உயர் வட்டாரங்கள் தெரிவித்துள்ளதாகக் கொழும்பிலிருந்து வெளிவரும் சண்டே ரைம்ஸ் வார ஏடு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்த ஏட்டின் பாதுகாப்பு ஆய்வுப் பகுதியில் தெரிவிக்கப்பட்டுள்ளவற்றின் முக்கிய பகுதிகள் வருமாறு,

நாயாறுக் கடற்பகுதியில் கடந்த வார்ம் மூழ்கடிக்கப்பட்ட டோறாப் பீரங்கிப் படகு தொடர்பான பலத்த சந்தேகங்கள் எழுந்துள்ளன. கடந்த 22 ஆம் திகதி நடைபெற்ற இத் தாக்குதலில் டோறாப் பீரங்கிப் படகு திடீரென வெடித்துச் சிதறி குறுகிய நேரத்தில் மூழ்கிப் போயுள்ளது.

இத் தாக்குதலில் காணாமல் போன 10 கடற்படையினரின் மூன்று பேரின் சடலங்கள் இந்த வாரத்தின் முற்பகுதியில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவில் விமானத் தாக்குதல்


(கொழும்பு)

முல்லைத்தீவு அலம்பில் பகுதியில் விடுதலைப்புலிகளின் இனங்காணப்பட்ட இலக்கொன்றின் மீது நேற்று விமானத் தாக்குதல் நடத்தப்பட்டதாக விமானப் படைப் பேச்சாளர் அன்று விஜயசூரிய தெரிவித்துள்ளார்.

அதிவேக விமானங்களைப் பயன்படுத்தி நடத்தப்பட்ட தாக்குதலில் கடற்புலிகளின் முகாம் ஒன்று இலக்கானதாக அவர் தெரிவித்துள்ளார். இந்தத் தாக்குதல் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டதனை விமானிகள் உறுதி செய்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

(ச-2,5)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்





இந்துக் கல்லூரிகளுக்கிடையிலான துடுப்பாட்டப்போட்டியின் முடிபில் கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் அ.அகிலதாஸ், யாழ்.இந்துக் கல்லூரி அதிபர் வீ.கணேசராஜா, பிரதம விருந்தினராக கலந்து கொண்ட செலிங்கோ இன்ஷூரன்ஸ் நிறுவனத்தின் யாழ்.பிராந்திய விற்பனை முகாமையாளர் பி.நந்திக்குமரன்,சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட கஜமுகன் ஹாட்வெயார் உரிமையாளர் ஈ.எஸ்.பி.நவரத்தினம் ஆகியோர் உரையாற்றுவதை முதல் நான்கு படங்களிலும் பரிசளிப்பு நிகழ்வில் சூழ்ந்திருக்கும் ரசிகர்களை 5-வது படத்திலும் வெற்றி பெற்ற இரு கல்லூரி அணிகளின் தலைவர்கள் வெற்றிக் கிண்ணத்துடன் காணப்படுவதை 6-வது படத்திலும் காணலாம்.

# இந்துக் கல்லூரிகளுக்கிடையிலான துடுப்பாட்டப்போர் சமனிலையில் முடிவு

## ஆட்டநாயகனானார் சி.நிரோஜன்

(யாழ்ப்பாணம்)

இந்துக் கல்லூரிகளுக்கிடையிலான துடுப்பாட்டப்போர் சமனிலையில் முடிவுற்றது. கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும் யாழ். இந்துக் கல்லூரிக்குமிடையிலான 'இந்துக் கல்லூரிகளுக்கிடையிலான துடுப்பாட்டப்போர்' என வர்ணிக்கப்படும் இரு தினங்களைக் கொண்ட இன்னிங்ஸ் துடுப்பாட்டப்போட்டி கடந்த இரு நாட்களாக கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ்.இந்துக் கல்லூரி அணித் தலைவர் தி.கௌசிகன் முதலில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை துடுப்பாட அழைத்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணி அதன் முதலாவது இன்னிங்ஸில் 200 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதில் நிதர்சன் 42 ஓட்டங்களையும் ஏரகன் ஆட்டமிழக்காமல் 33 ஓட்டங்களையும் வல்லவக்குமரன் 26 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்துவீச்சில் யாழ்.இந்துக் கல்லூரி அணி சார்பாக அஜித் 4 விக்கெட்டுக்களையும் சங்கீதன் 3 விக்கெட்டுக்களையும் மற்றும் பிரியதர்சன், பவசுதன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய யாழ்.இந்துக் கல்லூரி அணி நேற்று முன்தினம் முதல் நாள் ஆட்டநேர முடிபில் 2 விக்கெட்டுக்களை இழந்து 29 ஓட்டங்களை எடுத்திருந்தது.

தொடர்ந்து 2-வதும் இறுதியுமான நாளான நேற்று துடுப்பெடுத்தாடிய யாழ்.இந்துக் கல்லூரி அணி நிரூஜனின் சிறப்பான அரைச்சதத்தின் மூலம் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 148 ஓட்டங்கள் என்ற கௌரவமான இலக்கை அடைந்தது.

இதில் சிறப்பாக ஆடிய நிரூஜன் (4 நான்கு ஒரு ஆறு உட்பட) 50 ஓட்டங்களையும் சுதாகரன் (5 நான்கு, ஒரு ஆறு உட்பட) 39 ஓட்டங்களையும் எடுத்தனர். உதிரிகளாக 17 ஓட்டங்கள் கிடைத்தது. பந்துவீச்சில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி சார்பாக சி.நிரோஜன் 26 ஓவர்கள் பந்துவீசி 4 ஓட்டமற்ற ஓவர் உட்பட 43 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களையும் ஏரகன் ஆறு ஓவர்கள் பந்துவீசி 2 ஓட்டமற்ற ஓவர்கள் உட்பட 10 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் கு.நிரோசன் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து முதலாவது இன்னிங்ஸில் 52 ஓட்டங்கள் முன்னிலையிலிருந்த கொக்குவில் இந்துக் கல்லூரி அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி வல்லவக்குமரனின் அதிரடி அரைச்சதத்துடன் 19.4 ஓவர்களை எதிர்கொண்டு 3 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 123 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை இடை நிறுத்தி யாழ். இந்துக் கல்லூரி அணிக்கு வெற்றி இலக்காக 176 ஓட்டங்களை நிர்ணயித்தது.

துடுப்பாட்டத்தில் அதிரடியாக ஆடிய சி.வல்லவக்குமரன் 48 பந்துகளை மாத்திரம் எதிர்கொண்டு (5 நான்கு, 5 ஆறு உட்பட) 69 ஓட்டங்களையும் இ.நிரூஜன் ( 6 நான்கு உட்பட) 37 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ஆ.பிரியதர்சன் 2 விக்கெட்டுக்களையும் அஜித் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினார். தொடர்ந்து ஆட்டம் நிறைவடைவதற்கு 10 ஓவர்களே மீதமுள்ள நிலையில் 176 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய யாழ்.இந்துக் கல்லூரி அணி ஆட்டநேர முடிபில் 2 விக்கெட்டுக்களை இழந்து 43 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இதனடிப்படையில் இரு கல்லூரி அணிகளுக்குமிடையிலான துடுப்பாட்டப்போட்டி சமனிலையில் முடிபடைந்தது.

துடுப்பாட்டத்தில் ரா.நிரூஜன் 9 ஓட்டங்களையும் ரா.அருண்ராஜ் ஆட்டமிழக்காமல் 17 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்துவீச்சில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி சார்பாக சி.நிரோஜன் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினார்.

இக்கல்லூரிகளுக்குமிடையிலான துடுப்பாட்டப்போரின் ஆட்டநாயகனாக கொக்குவில் இந்துக் கல்லூரி அணியின் சி.நிரோஜன் தெரிவானதுடன் அவரே சிறந்த பந்துவீச்சாளர் விருதையும் பெற்றார்.

மேலும் சிறந்த துடுப்பாட்டவீரராக கொக்குவில் இந்துக் கல்லூரி அணியின் சி.வல்லவக்குமரனும், சகலதுறை ஆட்டவீரராக கொக்குவில் இந்துக் கல்லூரி அணியின் இ.ஏரகனும் தெரிவானார்கள். (5)

## சர்வகட்சிக்...

ஆதரவை தொடர்ந்து பெற்றுக் கொள்வதற்கு அங்கீகாரம்.

❖ சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்திற்கு இக்கட்டான சூழ்நிலையில் ஆதரவு நல்கின்ற இதர கட்சிகளின் தலைவர்கள் உள்ளிட்ட சகல அங்கத்தவர்களுக்கும் மாநாட்டில் கௌரவம் செலுத்தப்பட்டதுடன் அவ் ஆதரவைத் தொடர்ந்து பெற்றுக் கொள்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது.

❖ உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றியீட்டிய கட்சிகள் மற்றும் வாக்களித்த மக்களுக்கும் மாநாட்டில் நன்றி தெரிவிக்கப்பட்டதுடன் அக் கட்சிகள் மற்றும் மக்களின் ஆதரவை எதிர்காலங்களிலும் பெற்றுக் கொள்வதற்கு மாநாட்டில் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

❖ சர்வதேச சந்தையில் அதிகரித்துச் செல்கின்ற எண்ணெய் விலைகளினால் இதர பொருள்களின் விலைகளும் அதிகரிக்கப்பட்டு மக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். இவற்றை நிவர்த்தி செய்வதற்கு தேசிய உற்பத்தியை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று மாநாட்டில் வலியுறுத்தப்பட்டதுடன் முன்னெடுப்பதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டது.

பயங்கரவாதத்தை தோற்கடிப்பதற்காகப் போராடி மக்களையும் நாட்டையும் பாதுகாக்கின்ற இராணுவ வீரர்களுக்கு மாநாட்டில் கௌரவம் செலுத்தப்பட்டதுடன் தாய் நாட்டைப் பாதுகாப்பதற்காக முன்னெடுக்கின்ற நடவடிக்கைகளுக்கும் மக்களின் ஆதரவைப் பெற்றுக் கொள்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. (ச-5)

## இந்தியத் தூதரக இராணுவ அதிகாரி...

பதுங்குகுழிகள் வெள்ளத்தால் நிறைந்துள்ளன. காப்பரண்களும் மழையின் தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளது.

பொறிவெடிகள் மழை நீரினால் கழுவப்பட்டு வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளன. கனரக கவச வாகனங்கள் மற்றும் டாங்கிகள் சதுர்ப்பு நிலங்களில் செயற்திறன் அற்றதாக மாறியுள்ளன.

படையினர் தற்போது உழவூர்திகளையே பயன்படுத்தி வருகின்றனர். எனினும் இதில் மிகவும் மோசமானது என்னவெனில் இரு தரப்பும் புதைத்து வைத்த மிதிவெடிகளும் பொறிவெடிகளும் மழை வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டு இடமாறியுள்ளதாகும்.

பொதுவாக மிதிவெடிகள் மற்றும் பொறிவெடிகள் புதைக்கப்படும்போது அவை தொடர்பான வரைபடங்கள் பேணப்படுவதுண்டு. இது பின்னர் அவற்றை அகற்றுவதற்குப் பயன்படும்.

தற்போது இந்த வரைபடம் குழம்பிப் போயுள்ளது. இதனிடையே பருவமழை காலத்தில் விடுதலைப்புலிகள் பெரும் எடுப்பிலான வலிந்த தாக்குதல்களை நடத்துவதுண்டு. அடை மழை , படையினரின் கனரக வாகனங்களின் பயன்பாடுகளையும் பீரங்கி மற்றும் வான் தாக்குதல்களையும் மட்டுப்படுத்தலாம்.

எனினும் கடந்த வாரம் ஓரளவு மழை தணிந்துள்ள நிலையில் படையினர் தமது நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பித்துள்ளனர். பறையனாலங்குளம் பகுதியில் நடைபெற்ற படை நடவடிக்கையில் 4 இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் 25 பேர் காயமடைந்துள்ளதாகப் படைத் தரப்புத் தெரிவித்துள்ளது.

எனினும் படையினரின் தகவல்களை சுயாதீனமாக உறுதி செய்ய முடியவில்லை. கொழும்பில் ஜனாதிபதி தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை கூட்டப்பட்ட சிறப்புப் பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் யாழ்.குடாநாட்டு மற்றும் வன்னிப் பகுதி இராணுவத் தளபதிகள் உட்பட முப்படைத் தளபதிகளும் அழைக்கப்பட்டிருந்தனா.

அவர்கள் தற்போதைய படை நடவடிக்கைகள் தொடர்பாக ஜனாதிபதிக்கு விளக்கமளித்துள்ளனர். இந்த விளக்கத்தின்போது வரைபடங்களும் காண்பிக்கப்பட்டதுடன் தற்போதைய வெற்றிகள் மற்றும் எதிர்கால நடவடிக்கைகளும் ஆராயப்பட்டன.

படையினருக்கிடையிலான ஒருங்கிணைந்த நடவடிக்கைகள் மற்றும் வான் தாக்குதல்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டன. மேலும் பல விடயங்கள் ஆராயப்பட்ட போதும் பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டு அது தவிர்க்கப்பட்டுள்ளது.

இந்த மாநாட்டில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, முப்படைத் தளபதிகள், யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சந்திரசிறி, 57-வது படையணியின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ், 58 -வது படையணியின் கட்டளைத் தளபதி பிரிகேடியர் சவீந்திர சில்வா , 59-வது படையணியின் கட்டளைத் தளபதி பிரிகேடியர் நந்தன உடுவத்த மற்றும் கடற்படையின் பிராந்தியக் கட்டளைத் தளபதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதனிடையே இலங்கையிலுள்ள இந்தியத் தூதரகத்தின் பாதுகாப்புப் பிரிவு அதிகாரியான கப்டன் பிரதீப் சிங், யாழ்.குடாநாட்டுக்கு மூன்று நாள் பயணம் செய்துள்ளார். இதன்போது அவர் பாதுகாப்புப் படையினரின் முன்னரங்க நிலைகளுக்கும் சென்றதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## இன்று ஒரு தகவல்

### அகத்தூய்மை

``எப்பொழுதும் சுத்தமாக இருக்க வேண்டும். அது தான் நல்லது'' என்றார் ஒருவர். ``நான் அப்படித்தான் இருக்கிறேன். தினமும் இரண்டு வேளை சோப்பு போட்டுக் குளிக்கிறேன்'' என்றார் இன்னொருவர். ``உடம்பு மட்டும் சுத்தமாக இருந்தால் போதாது; மனதும் சுத்தமாக இருக்க வேண்டும்'' என்றார் அவர். மனதைச் சுத்தப்படுத்துவதற்கு என்ன சோப்பு போடலாம் என்று கேட்டார் இவர். ``ஆன்மீகம்'' என்ற சோப்பு தான் அதற்குப் பொருத்தம் என்றார் அவர்.

ஆன்மாவை மேம்படுத்துகிற ஒரு முயற்சி தான் ஆன்மீகம். அந்த முயற்சியை எப்படி மேற்கொள்வது? மனதுக்குள் குடி கொண்டிருக்கிற வேண்டாத விருந்தாளிகளையெல்லாம் வெளியேற்ற வேண்டும். அப்படி வெளியேற்றப்படவேண்டிய விருந்தாளிகளிலே முக்கியமான ஒருவர்-பொறாமை. இவர் மனதுக்குள் இருக்கிறவரை நாம் நிம்மதியாக இருக்க முடியாது.

ஒரு குருநாதருக்கு இரண்டு சீடர்கள். ஆரம்பத்தில் இவர்கள் இருவரும் நல்லபடியாகத்தான் பழகிக்கொண்டிருந்தார்கள். என்ன காரணமோ தெரியாது. அவர்களில் ஒருவரது மனதிலே பொறாமை என்னும் விருந்தாளி வந்து உட்கார்ந்துவிட்டான். இதனால் குருவிடம் தான் நல்லபெயர் வாங்க வேண்டும்; நண்பன் கெட்டபெயர் வாங்க வேண்டும் என்ற ஆசைவளர ஆரம்பித்தது. ஒருநாள் விடியற்காலை எழுந்திருந்து தனது கடமைகளையெல்லாம் முடிந்துக்கொண்டு நேராகக் குருவிடம் சென்று ``குருவே! என்னைப் பாருங்கள், நான் எவ்வளவு சீக்கிரமாக எழுந்து குளித்துவிட்டு உங்களை வணங்குவதற்காக வந்து நிற்கிறேன்... ஆனால் அவன் இன்னும் தூங்கிக்கொண்டே இருக்கிறான்'' என்றான். குரு அவனைப் பார்த்து அப்படியானால் நீயும் அவனைப் போலத் தூங்கியிருக்கலாமே. என்றார் ``நான் எவ்வளவு தீவிரமாக ஒரு விஷயத்தைச் சொல்லுகிறேன்... அதற்கு குருநாதர் இப்படிச் சொல்கிறாரே'' என நினைத்துக்கொண்டு குருவைப் பார்த்தான். ``நீயும் தூங்கியிருந்தால் அடுத்தவனைப் பற்றிக்குறை சொல்வதற்கு இங்கு வந்திருக்க மாட்டாய் அல்லவா'' என்றார் குரு. சீடன் யோசிக்க ஆரம்பித்தான். அர்த்தம் புரிந்தது. உடனே பொறாமை என்ற விருந்தாளியை மனதில் இருந்து தூக்கி எறிந்தான். அவன் மனம் சுத்தமானது.

மனதுக்குள் இருந்து விரட்ட வேண்டிய இன்னொரு விருந்தாளி ``கோபம்''! ``சினம் தன்னையே கொன்று விடும் என்கிறார் வள்ளுவர்.'' அதனால்தான் ``சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி...'' என்கிறார்கள். கோபத்துக்கு மனதிலே இடம் கொடுக்காத சில பெரியவர்களும் உண்டு. ஒரு குருநாதர் ஒரு சமயம் ஆற்றுக்குச் சென்று குளித்துவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்தார். வருகிற வழியிலே மரத்திலே உட்கார்ந்திருந்த ஒருவன் அவர் மேல் துப்பினான். குரு திரும்பிப் போய் மறுபடியும் ஆற்றில் குளித்து விட்டு வந்தார். மறுபடியும் அவன் அவர் மீது துப்பினான்... குரு கோபப்படாமல் திருப்பிச் சென்று குளித்துவிட்டு வந்தார். இப்படிப் பலமுறை இது நடந்தது. ஒரு கட்டத்தில் அந்த ஆள் தன் முயற்சியில் தோற்றுப் போய் குருவின் காலில் விழுந்தான். ``நான் பலமுறை உங்கள் மீது துப்பியும் நீங்கள் கோபப்பட்டு ஒரு வார்த்தை கூடப் பேசாமல் இருக்கிறீர்களே... எப்படி? என்று கேட்டான். அதற்கு அந்தக் குரு'' நான் கோபப்பட்டிருந்தால் என் மனம் அசுத்தமாகி இருக்கும். உடம்பு அசுத்தமானால் குளித்துச் சுத்தப்படுத்திக்கொள்ளலாம். மனதை அப்படிச் சுத்தப் படுத்த முடியாது என்றார். ஆகவே மனது அசுத்தமாகாமல் பார்த்துக்கொண்டிருக்க வேண்டியது நமது கடமை.

மனதை அசுத்தப்படுத்தும் இன்னொருவிஷயம் சுயநலம். ஒரு சுயநலவாதி ஆற்றிலே விழுந்துவிட்டார். சுழலிலே சிக்கிக்கொண்டார். கரையிலே நின்ற இன்னொரு சுயநலவாதி இதைக் கண்டார். ஒரு கயிற்றை தூக்கிப்போட்டு அதைப் பிடிக்கச் சொல்லி அவரை இழுத்துக் கரையேற்றினார். இவர் கரையேறியதும் இவரைப்பார்த்து என்னைச் சுழலில் இருந்து காப்பாற்றியதற்காக உங்களுக்கு 50ரூபா கொடுக்கலாம் என்று பார்க்கிறேன். ஆனால் என்னிடம் ஒரே யொரு 100ரூபா நோட்டு அல்லவா இருக்கிறது... என்றார். உடனே காப்பாற்றியவர் அவரைப் பார்த்து... அப்படியானால் நீங்கள் இன்னொருமுறை ஆற்றிலே விழுந்து விடுங்கள். நான் மறுபடியும் காப்பாற்றுகிறேன். 100 ரூபாவைக் கொடுத்துவிடுங்கள்... என்றார். இப்படிப்பட்டவர்கள் எத்தனை தடவை தண்ணீரில் விழுந்தாலும் மனம் சுத்தமாகப் போவதில்லை?

முக்காலும் காகம் மூழ்கிக்குளித்தாலும்
வெள்ளைக் கொக்காகுமா?

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# அரசியலமைப்புச் சபையின் அனுமதியில்லாமல் நியமனங்களை மேற்கொள்ள முடியாது

## ஜனாதிபதிக்கு தொழில்சார் அமைப்புக்கள் ஒன்றியம் கடிதம்

(கொழும்பு)

அரசியலமைப்புச் சபைக்குப் பிரதிநிதிகளை நியமிப்பது தொடர்பாக எழுந்திருக்கும் பிரச்சினை நீதிமன்றத்துக்கு எடுத்துச்செல்லப்பட இருப்பதாகத் தெரிவித்திருக்கும் தொழில்சார் அமைப்புக்களின் ஒன்றியம், நிறைவேற்று அதிகாரம் என்பது சட்டத்துக்கு அப்பாற்பட்டது அல்ல என ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது.

அரசியலமைப்புச் சபைக்கான நியமனம் குறித்து ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்குவதற்காக சட்டமா அதிபர் தகுதிபெறவில்லையென தொழில்சார் அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் எல்மோ பெரேரா ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

சட்டநடவடிக்கைகளை ஜனாதிபதி ஒருவர் ஆட்சியிலிருக்கும்போது தடுப்பதற்கான உரிமைகள் குறித்து அரசியலமைப்பின் 35ஆவது சரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளமையைச் சுட்டிக்காட்டியிருக்கும் எல்மோ பெரேரா, ஜனாதிபதி தனது நடவடிக்கைகளை விளக்குமாறு கோரி நீதிமன்றத்துக்கு அழைக்கப்பட முடியாது எனத் தெரிவித்துள்ளார். எனினும் ஜனாதிபதியின் நடவடிக்கை குறித்து சட்ட நீதிமன்றத்தில் கேள்வி கேட்கப்படுவது வேறுபட்டது என அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதம நீதியரசர், உயர்நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றங்களின் நீதிபதிகள், நீதிச்சேவைகள் ஆணைக்குழுவின் அதிகாரிகள், சட்டமா அதிபர், கணக்காய்வாளர் நாயகம், பொலிஸ்மா அதிபர், ஒம்புட்ஸ்மன், பாராளுமன்றச் செயலாளர் நாயகம் ஆகியோரின் நியமனம் குறித்து அரசியலமைப்பின் 41 சீ சரத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு, தொழிசார் அமைப்புக்கள் அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது.

``ஜனாதிபதியின் முன்மொழிவு அரசியலமைப்புச் சபையால் ஏற்றுக் கொள்ளப்பட்டாலே அன்றி மேற்குறிப்பிடப்பட்ட பதவிகளுக்கான நியமனங்களை ஜனாதிபதியால் மேற்கொள்ளமுடியாது' என எல்மோ பெரேரா தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

'மேற்குறிப்பிடப்பட்ட பதவிகளில் ஏற்கனவே சில வெற்றிடங்கள் இருப்பதுடன், மேலும் சில வெற்றிடங்கள் ஏற்படும் அரசியலமைப்புச் சபையை நியமிக்காமல் மேற்குறிப்பிடப்பட்ட வெற்றிடங்களுக்கு சட்டரீதியற்றவகையில் நியமனங்களை மேற்கொள்ள வேண்டாமென உங்களிடம் கோரிக்கைவிடுக்கிறோம்' என தொழில்சார் அமைப்புக்கள், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, தொழில்சார் அமைப்புக்கள் அனுப்பியுள்ள கடிதம் தொடர்பாக கருத்துத் தெரிவிப்பதற்கு சட்டமா அதிபர் சி.ஆர்.டி. சில்வா மறுப்புத் தெரிவித்துள்ளார். 'தேவையற்ற பிரச்சினைக்குள் என்னை மாட்டிவிடாதீர்கள். அரசாங்கம் மற்றும் ஜனாதிபதிக்கு சட்டரீதியான உதவிகள் தேவைப்படும்போது அவை குறித்த சட்டரீதியான ஆலோசனைகளை வழங்குவதே எனது தொழில். ஏனைய விடயங்கள் பற்றி நான் கருத்துத் தெரிவிக்கத்தயாரில்லை' என சட்டமா அதிபர் கொழும்பு ஆங்கில ஊடகமொன்றிடம் கூறியிருந்தார். அ-5)

# மதவாச்சி, ஓமந்தை ஊடாக பயணிப்பதில் தாமதம் ஏற்படுவதாக ஐ.சி.ஆர்.சி. தெரிவிப்பு

(கொழும்பு)

மதவாச்சி மற்றும் ஓமந்தை சோதனைச் சாவடிகளில் இராணுவத்தினர் அறிமுகப்படுத்தியிருக்கும் மேலதிக பாதுகாப்பு நடவடிக்கைகளால் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கும், அரசாங்க கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கும் இடையில் மக்கள் நடமாட்டங்கள் மிகவும் குறைத்திருப்பதாக சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் தெரிவித்துள்ளது.

இந்தப் புதிய பாதுகாப்பு நடவடிக்கைகளால் வர்த்தக ரீதியாகப் பயணிக்கும் வாகனங்கள் நீண்ட நேரம் தரித்துநிற்கவேண்டி ஏற்பட்டுள்ளது. ஓமந்தை சோதனைச்சாவடியில் நீண்ட வரிசையில் காத்திருக்கும் வாகனங்களைச் சோதனை செய்து விடு விப்பதற்கு கிழமையில் ஆறு நாட்கள் பணியை மேற்கொள்ளுமாறு அரசாங்கம் கோரிக்கை விடுத்ததாகவும், அரசாங்கத்தின் கோரிக்கைக்கு அமைய மேலதிக பணியாளர்களை ஓமந்தைச் சோதனைச்சாவடியில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் சர்வதேசசெஞ்சிலுவைச்சங்கம் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

கடந்த பெப்ரவரி மாதத்தில் மாத்திரம் ஓமந்தைச் சோதனைச்சாவடி ஊடாக 25ஆயிரம் பேர் பயணித்துள்ளனர். வடக்கிலிருந்து தெற்கு நோக்கி 400 பேர் மருத்துவச் சிகிச்சைக்காகப் பயணித்துள்ளனர். 200 அம்புலன்ஸ் வண்டிகள் உட்பட 3,500 வாகனங்கள் பயணித்துள்ளன என்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது.

'வன்னிப் பகுதியில் வாழும் பொதுமக்கள் மருத்துவத் தேவை கருதி அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கும், அரச கட்டுப்பாடற்ற பகுதிகளுக்கும் இடையில் பயணிக்க வேண்டிய தேவை உள்ளது' என கொழும்பிலுள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் குழுவின் தலைவர் ரூன்! வென்டோவ் கூறியுள்ளார்.

'அவர்கள் வாழும் பகுதிகளில் மருந்து மற்றும் ஏனையப் பொருள்களைக் கொள்வனவு செய்யக் கூடியதாக இருப்பது அவசியம். இதனால் தான் வன்னிப் பகுதிகளுக்கு அத்தியாவசியப்பொருள்களைஎடுத்துச்செல்லும் வாகனங்கள் அனுப்பப்படுவது அவசியம். இதனைக் கருத்தில் கொண்டே ஓமத்தை சோதனைச் சாவடியில் கிழமையில் ஆறு நாட்கள் பணியாற்ற நாங்கள் நடவடிக்கை எடுத்துள்ளோம்' என அவர் தெரிவித்துள்ளார்.

மோதல்கள் இடம்பெறும் முன்னரங்கப் பகுதிகளில் கொல்லப்படும் போராளிகளின் சடலங்களைப் பரிமாறுவதற்கும் உதவிகள் செய்யப்படுகின்றன. இரண்டு தரப்பினரும் இணங்கும் பட்சத்தில் சூனியப் பிரதேசத்தின் ஊடாக சடலங்கள் எடுத்துச்செல்லப்பட்டு கையளிக்கப்படும். கடந்த பெப்ரவரி மாத்தில் மாத்திரம் ஓமந்தைச் சோதனைச்சாவடி ஊடாக 40 சடலங்கள் எடுத்துச்செல்லப்பட்டிருந்தன என்று சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

சர்வதேச மனித உரிமைச் சட்டங்களுக்கு அமைய பொதுமக்களைப் பாதுகாப்பது குறித்து கவனம் செலுத்தியிருப்பதுடன் மக்களின் பாதுகாப்புத் தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகத் தெரிவித்திருக்கும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் 45 வித்தியாசமான பகுதிகளுக்குச் சென்று மக்களுடன் தனிப்பட்ட சந்திப்புக்களை நடத்தியிருப்பதுடன் பாதுகாப்புக் காரணங்களுக்காக கைது செய்யப்பட்ட 520ற்கும் அதிகமானவர்களுடன் கலந்துரையாடல்களை நடத்தியிருப்பதாகத் தெரிவித்துள்ளது. (அ-5)

## இராசிபலன்

31.03.2008
(பங்குனி 18, திங்கட்கிழமை)
உத்தராடம் முன்னிரவு 11.40மணிவரை
நவமி பிற்பகல் 02.23 மணி வரை
இராகுகாலம் 07.41-09.11 மணிவரை
சுபநேரம்-12.11-01.41 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | கடினமுயற்சி, அதிகாரம், போசன சுகம், தூரதேசச் செய்தி. |
| இடபம் | புதிய திட்டமிடல், தந்தைவழி உறவு, காரிய தாமதம். |
| மிதுனம் | வீண் பிரச்சினை, முயற்சி தடங்கல், ஆரோக்கியக்குறைவு, திடீர்நன்மை. |
| கடகம் | செல்வாக்கு, முயற்சி கைகூடும், தெய்வநம்பிக்கை, போசனசுகம். |
| சிங்கம் | தேகநலன், தடைப்பட்டகாரியம் கைகூடும், நல்லசெய்தி.' |
| கன்னி | வியாபாரசிந்தை, ரோகநிலை, தன்னம்பிக்கைக்குறைவு. |
| துலாம் | மாதாசுகம், கல்வியில் ஆர்வம், மனச்சஞ்சலம். |
| விருச்சிகம் | அந்நியர் சந்திப்பு, சுபநிகழ்வு, காரிய அனுகூலம், போசனசுகம். |
| தனுசு | அதிகசெலவு, உணர்ச்சிவசப்படல், முயற்சி தாமதம், பிரயாணம். |
| மகரம் | பெரியோர் உதவி, நல்ல முயற்சி, தெய்வசிந்தை, போசனசுகம். |
| கும்பம் | பிரயாணம், அமைதிக்குறைவு, மனஸ்தாபம், காரிய தாமதம். |
| மீனம் | குடும்பசுகம், போசன நன்மை, செய்தொழில் விருத்தி. |


வளவன்

# மட்டக்களப்பு நடமாடும் சேவையில் தமிழ் புறக்கணிப்பு, சிங்களம் திணிப்பு

மட்டக்களப்பில் நேற்று முன்தினம் ஆரம்பமான மக்கள் நடமாடும் சேவையில் கலந்துகொண்ட அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட அட்டையில் தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்டுள்ளமை பற்றி பொதுமக்கள் கடும் விசனம் தெரிவித்துள்ளனர்.

அதுமட்டுமன்றி ஆங்கில மொழி மட்டும் குறிப்பிட்டுள்ள அந்த அட்டையில் சிங்களச் சொற்கள் ஆங்கில எழுத்துகளால் குறிப்பிடப்பட்டுள்ளது பற்றியும் கவலை வெளியிட்டுள்ளது. மக்கள் உபசரணை சேவை என்பதற்கான சிங்களச் சொல் ஜனதா சத்காரக சேவய என்பதாகும். அது அந்த அட்டையில் ஆங்கிலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முற்று முழுதாக தமிழ் பேசும் மக்களுக்காக தமிழ் பகுதியில் நடத்தப்படும் ஒரு நடவடிக்கையில் இவ்விதம் தமிழ் புறக்கணிக்கப்பட்டு சிங்களம் திணிக்கப்பட்டுள்ளது கவலையளிப்பதாக பலரும் தெரிவித்தனர். (அ-5)



மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயத்தின் 175-வது ஆண்டு விழா மலர் வெளியீடும் பரிசளிப்பு விழாவும் அண்மையில் நடைபெற்றது. இவ்விழாவின் விருந்தினர்கள் மல்லாகம் மகா வித்தியாலய பாண்ட் வாத்தியக் குழுவினரால் அழைத்து வரப்படுவதையும் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வலிகாமம் கல்வி வலயப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அவர்கள் உரையாற்றுவதையும், நூல் மதிப்பீட்டுரையை வழங்கிய யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி சி.சிவலிங்கராஜா,தெல்லிப் பழைக் கோட்டக்கல்விப் பணிப்பாளர் ச.கைலாசநாதன், பாடசாலை முதல்வர் மா.ஆனந்தகுமார் ஆகியோரைப் படங்களில் காணலாம்.

## கணனி வகுப்புக்கள்

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையில் கணனி வகுப்புக்கள் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை தொடக்கம் நடைபெறவிருக்கின்றது. இதில் கல்வி கற்க விரும்புவர்கள் இன்று திங்கட்கிழமை இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை காரியாலயத்தில் மு.ப 9 மணிக்கு வருகை தரும்படி தலைவர் பேராசிரியர் வி.கே. கணேசலிங்கம் கேட்டுக் கொண்டுள்ளார். பயிற்றப்பட்ட ஆசிரியர்களால் வகுப்புக்கள் நடைபெறவுள்ளதாகவும் அறிவித்துள்ளார். (ஓ)

## சுவாமி விவேகானந்தரின் திருவுருவப் படம் திரைநீக்கம்

யாழ்.கனகரத்தினம் மகா வித்தியாலயத்தில் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு அதிபர் வி. மாணிக்கத்தினால் சுவாமி விவேகானந்தரின் அழகிய திருவுருப் படம் திரைநீக்கம் செய்யப்படவுள்ளது.

நிகழ்வில். பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தா உரை நிகழ்த்தவுள்ளார். (ஓ)

# தனியார் வர்த்தகர் மூலம் யாழ்ப்பாணத்துக்கு தார்

(யாழ்ப்பாணம்)

தனியார் வர்த்தகர் ஒருவர் தார் பரல்களை யாழிற்கு எடுத்துவர நடவடிக்கை எடுத்துள்ளார்.

முதன் முறையாக குறித்த வர்த்தகர் 100 பரல் தார்களை தற்போது கொழும்பில் கப்பலில் ஏற்றுவதற்கான அனுமதியைப் பெற்றுள்ளார்.

இவ்வாறு கப்பலில் எடுத்துவரப்படும் தார் யாழ்ப்பாணத்தில் சுமார் 29 ஆயிரம் ரூபா வரையில் விற்பனை செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்திற்குத் தேவையான தார் எடுத்துவரப்படாமையினால் வீதிகள் புனரமைப்பதில் சிக்கல்கள் காணப்பட்டன.

எனினும் தனியார் ஊடாக தார் எடுத்து வரப்படுகின்றமையினால் அதனைக் கொள்வனவு செய்து வீதிகளைப் புனரமைக்க நடவடிக்கை எடுக்க முடியும் எனவும் கூறப்பட்டது. (ச-5)

## பொங்கல் விழா

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் தெற்கு கட்டப்பிராய் வீரமாகாளி அம்மன் ஆலய பொங்கல் விழாவும் தீ மிதிப்பும் இன்று காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகி பிற்பகல் 4 மணிவரை நடைபெறும். (ச)

## முகாமைத்துவப் பயிற்சி

யாழ்.லயன்ஸ் கழகம் ஒழுங்கு செய்துள்ள முன்பள்ளி ஆசிரியர்களுக் கான முகாமைத்துவப் பயிற்சியும், கருத்தரங்கும் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 1மணி தொடக்கம் 5 மணி வரை யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் நடைபெறும். (அ)

## சுவிஷேச படக்காட்சி

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் பிறவுண் வீதியில் அமைந்துள்ள கல்வாரி பூரண சுவிஷேச தேவாலயத்தினால் இல.17 அன்னசத்திர லேன், கந்தர்மடம், யாழ்ப்பாணத்தில் ஏப்ரல் மாதம் 3ஆம் திகதி வியாழக்கிழமை 3.30 மணிக்கு 'இயேசு' (இயேசுவைப் பற்றிய காவியம்) என்ற வீடியோ சுவிஷேசப் படக்காட்சி ஊழியம் செய்யப்படவுள்ளது. (ஓ)

# யாழ் செய்திகள்

# உலக உணவுத் திட்டத்திற்குரிய உணவுப் பொருளை விற்றல்

ஐக்கிய நாடுகள் உலக உணவுத் திட்டத்தின் கீழ் நலிந்த பிரிவினருக்கும். கல்விக்கான உணவாகவும், தாய்-சேய் நல திட்டத்தின் கீழும்,வேலைக்கான உணவாக வும் உணவுப் பொருட்கள் பயனாளிகளிற்கு வழங்கப்பட்டு வருகின்றது.இவ்வாறு வழங்கப்படும் உணவுப் பொருட்கள் வெளிச் சந்தையிலும், சில பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைகள் வாயிலாகவும் விற்கப்பட்டு வருவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளதாக யாழ். அரச அதிபரின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.அச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பல்வேறு நாடுகளிலும் அன்பளிப்புச் செய்யப்பட்டு உரிய பகுதியினருக்கு வழங்குவதற்காக வழங்கப்படும் இவ் வகை உணவுப் பொருட்கள் சந்தையில் எக் காரணத்திற்காகவும் விற்கப்படக்கூடாது .மேலும் அரச அதிபரின் அல்லது உலக உணவுத் திட்ட அலுவலரின் எழுத்துமூல அனுமதியின்றி உணவுப் பொருட்கள் மாற்றம் செய்தல் கூடாது.

எனவே இதில் சம்பந்தப்பட்ட நபர்களை "இவற்றை விற்கவேண்டாம்" எனவும் மேலும் இவற்றை எக்காரணம் கொண்டும் "கொள்முதல் செய்யவேண்டாம்" என்று மொத்த சில்லறைவியாபாரிகளைக் கேட்டுக்கொள்கின்றேன்.

இவற்றை மீறி உணவுப் பொருட்களை விற்பனை செய்வோர்க்கு, பண்டங்களை மாற்றுவோர், எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டு தண்டனைக்கு உள்ளாக்கப்படுவார்கள் என்பதனை தெரிவித்துக்கொள்கின்றேன். சில வேளைகளில் குறிப்பிட்ட வேலைத் திட்டமே நிறுத்தப்படக் கூடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# திருக்குறள் மனனப் போட்டி

(நீர்வேலி)

நீர்வேலி காமாட்சி அம்பாள் இந்து பரிபாலன சபை வருடாவருடம் மாணவரிடையே திருக்குறள் மனனப் போட்டி, திருக்குறள் எழுத்துச் பரீட்சை, சமய அறிவுப் பரீட்சை என்பன நடாத்தி வருகின்றது.

இதனடிப்படையில் இவ் வருடம் கடந்த 20 ஆம் திகதி நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி, கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, புத்தூர் ஸ்ரீசோமாஸ்கந்தக் கல்லூரி, அச்சுவேலி மத்திய கல்லூரி, உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாசாலை என்னும் ஐந்து பரீட்சை நிலையங்களில் மனனப் போட்டியும், எழுத்துப் பரீட்சையும் நடாத்தப்பட்டது.

தரம் 1 மாணவர்களுக்கு 1ஆம் அதிகாரம், தரம் 2மாணவர்களுக்கு 1ஆம், 2ஆம் அதிகாரம், தரம் 3மாணவர்களுக்கு 1ஆம் , 2ஆம் அதிகாரம் எனத் தனித்தனி வகுப்பு ரீதியாக மனனப்போட்டி நடாத்தப்பட்டது. இப் போட்டியில் சுமார் 356 மாணவர்கள் தோற்றினர். இவர்களில்தெரிவுசெய்யப்பட்ட 36மாணவர்களுக்கு 29ஆம் திகதி நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி மண்டபத்தில் இறுதித் தேர்வு நடாத்தப்பட்டது.

எழுத்துப் பரீட்சை தரம்4,5 மாணவர்கள் பிரிவு II எனவும், 6,7,8 ஆம் தர மாணவர்கள் பிரிவு III எனவும் 9,10,11 ஆம் தர மாணவர்கள் தரம் IV எனவும், க.பொ.த உயர்தர மாணவர்கள் பிரிவு V எனவும் வெவ்வேறு பிரிவுகளாக பரீட்சை எழுதினர். சுமார் 853 மாணவர்கள் இப் பரீட்சைக்குத் தோற்றினர்.

மேற்படி சபை அறநெறிப் பாடசாலை மாணவர் களுக்கு திருக்குறள் சம்பந்தமான பேச்சுப் போட்டியும், முன்பள்ளி மாணவர்களுக்கு தனியான திருக்குறள் மனனப்போட்டியும் அடுத்தவாரம் நடாத்தப்படவுள்ளது.

எப்ரல் மாத நடுப்பகுதியல் திருக்குறள் போட்டிக்கான பரிசளிப்பு விழா நடாத்துவதெனவும் சமய அறிவுப் பரீட்சையை நவம்பர் மாதத்தில் நடாத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பரிபாலன சபைச் செயலாளர் தெரிவித்துள்ளார். (அ)

# 19ஆயிரம் மீனவக் குடும்பங்கள் வருமானமின்றி பாதிப்பு

(கொழும்பு)

குடாநாட்டில் தற்போதைய நிலையில் நாளொன்றிற்கு 1கிலோவுக்கு குறைவான மீனே மீனவரொருவரால் பிடிக்கப்படுவதாக கணிப்பிடப்பட்டுள்ளது.

இதன் பிரகாகரம் மீனவரொருவருக்கான நாள் வருமானம் நூற்றியெழுபது ரூபா மட்டுமேயெனவும் கண்டறியப்பட்டுள்ளது. இவ்வாறானதோர் வருமானத்தை நம்பியே சுமார் 19 ஆயிரம் குடும்பங்கள் வாழ்ந்து வரு கின்றன.

கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை திணைக்கத்தின் யாழ். அலுவலகத்தினால் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றிலேயே இத் தகவல் வெளியாகியுள்ளது.

இந்த ஆய்வின் பிரகாரம் மீனவரொருவரால் பிடிக்கப்படும் மீன் அவரது குடும்பத்தினது தேவையினைக் கூட நிறைவு செய்யப் போதாதுள்ளது. இதனால் மீனவக் குடும்பங்களும் ரின் மீனையே கொள்வனவு செய்ய வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

எனினும் அரசு- புலிகளிற்கிடையேயான சமாதான காலப் பகுதியில் படகொன்றின் மூலம் நாளொன்றுக்கு இருநூறு கிலோவிற்கும் மேல் மீன்பிடிக்கப்பட்டதாக மீனவ சங்கங்கள் கூறுகின்றன. அவ்வாறு பிடிக்கப்பட்ட மீனில் பெரும்பகுதி தென்னிலங்கைக்கு ஏற்றுமதி செய்யப்பட்டதாகவும் அவை கூறுகின்றன. (அ-5)




பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் கல்லூரி தினம் மற்றும் சாதனை மாணவர் கௌரவிப்பு விழாவுக்கு பிரதம விருந்தினரான யாழ்ப்பாணம் -வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி எஸ். சுவர்ணராஜா விருந்தினர் சகிதம் அழைத்து வரப்படுவதையும், பிரதம விருந்தினர் நீதிபதி எஸ்.சுவர்ணராஜா உரையாற்றுவதையும், பழைய மாணவர் மன்றச் செயலாளர் கே.வி.செல்வராஜன் நன்றியுரை நிகழ்த்துவதையும் படங்களில் காணலாம். (படம் :பரு.நிருபர்)

# பாகிஸ்தான் புதிய பிரதமர் கிலானி நம்பிக்கை வாக்கெடுப்பில் வெற்றி

(இஸ்லாமாபாத்)

புதிய பிரதமராகப் பொறுப்பேற்றுள்ள யூசுப் ரஸா கிலானி பாகிஸ்தான் நாடாளு மன்றத்தில் நம்பிக்கை வாக்கெடுப்பில் வெற்றி பெற்றார்.



படுகொலை செய்யப்பட்ட பெனாசீர் பூட்டோவின் ஆதரவாளரான கிலானி கடந்த திங்கட்கிழமை பதவி ஏற்றார். சனிக்கிழமை நடந்த நாடாளுமன்ற கூட்டத்தில் நம்பிக்கை வாக்கெடுப்பு நடந்தது. அதிபர் முஷாரப்புக்கு ஆதர வான பாகிஸ்தான் முஸ்லிம் லீக் -கியு கட்சி உள்பட அனைத்து எதிர்க்கட்சிகளும் புதிய பிரதமருக்கு ஒருமனதாக ஆதரவு அளித்தன.

### தீவிரவாதிகளுடன் பேச்சு நடத்த தயார்

பாகிஸ்தான் மக்கள். கட்சி தலைமையிலான புதிய அரசு பயங்கரவாதத்தை ஒழிக்க முன்னுரிமை அளிக்கும் என்று நாடாளுமன்றத்தில் பேசிய கிலானி கூறினார்.

ஆயுதங்களை அரசிடம் ஒப்படைத்து சரண் அடையும் தீவிரவாதிகளிடம் அரசு பேச்சு நடத்தும். கடந்த ஆண்டு அவசர நிலை இருந்தபோது பதவி நீக்கம் செய்யப்பட்ட நீதிபதிகள் மீண்டும் பதவியில் அமர்த்தப்படுவர் என்றார் அவர்.

### காஷ்மீர் மக்களின் தியாகம் வீணாகாது

காஷ்மீர் மக்களின் விருப்பப்படி அவர்களது நீண்டகால பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும். அவர்களது தியாகம் வீண் போகாது என்று உறுதி அளிக்கிறேன்.

நமது பக்கத்து நாடுகளுடன் அமைதி மற்றும் சகோதரத்துவத்தை வளர்க்க நாம் பாடுபடுவோம். அனைவரோடும் நல்லுறவை வளர்ப்பதே பாகிஸ்தான் வெளியுறவுக் கொள்கையின் அடிப்படையாகும். வாழு வாழவிடு என்ற கொள்கையில் எங்களுக்கு நம்பிக்கை உள்ளது. அதே போன்று மற்ற நாடுகளிடம் இருந்து எதிர்பார்க்கிறோம்.

### இஸ்லாமிய நாடுகளுடன் உறவு பலப்படுத்தப்படுவது அவசியம்

அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுடன் நல்லுறவை விரும்பும் பாகிஸ்தான் இஸ்லாமிய நாடுக ளுடனும் உற வை பலப்படுத்த வேண்டியது அவசியம். பக் கத்து நாடான சீனா பாகிஸ் தானின் பழைய நட்பு நாடு. ஆப்கா னிஸ்தானில் அமைதி ஏற்பட வேண்டும் என்று பாகிஸ் தான் விரும் புகிறது. வள மான முன் னேற்றப் பாதை யில் பாகிஸ்தான் செல்ல வேண் டும் என்று நாங் கள் விரும்பு கிறோம் என்றார் கில்னி.

காஷ்மீர் பிரச் சினையை ஒதுக்கி விட்டு மற்ற துறை களில் இந்தியா வுடன் உறவை மேம் படுத்த முயற்சி செய் வோம் என்ற ஆளும் கூட்டணி யின் தலைவரான பாகிஸ்தான் மக் கள் கட்சித் தலைவர் சர்தாரி கூறியிருந்தார். புதிய பிரத மர் கிலானி காஷ் மீர் பற்றி கூறியுள்ள கருத்து சர்தாரியின் கருத்துக்கு மாறாக உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

(அ-5)

# மீரா நாயருக்கு விருது

(நியூயோர்க்)

அமெரிக்காவில் இருந்து வெளியாகும் 'இண்டியா அப்ராட்' என்ற இந்திய பத்திரிகையின் விருது வழங்கும் விழா நியூயோர்க் நகரில் நடைபெற்றது. அதில் இந்தியாவில் பிறந்து உலக அளவில் புகழ்பெற்ற பெண் இயக்குனர் மீரா நாயருக்கு 'இந்த ஆண்டின் சிறந்த மனிதர்' என்ற விருது வழங்கப்பட்டது.

கடந்த ஆண்டு இவ்விருதை பெற்றிருந்த பெப்சிகோ நிறுவன தலைவர் இந்திரா நூயி, இவ்விருதை மீரா நாயருக்கு வழங்கினார். இந் நிகழ்ச்சியில் சர்ச்சைக்குரிய எழுத்தாளர் சல்மான் ருஷ்டி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

(அ-5)

# ஈபிள் கோபுர உச்சி மேடையை அகட்டிக்க முடிபு

(பாரீஸ்)

பிரான்ஸ் தலைநகர் பாரீஸ் ஈபிள் டவர் உள்ளது. ஆண்டுதோறும் 70 இலட்சம் சுற்றுலா பயணிகள் இதை கண்டு களிக்கின்றனர். ஈபிள் டவர் அமைக்கப்பட்டு, 2009ஆம் ஆண்டுடன் 120 ஆண்டுகள் நிறைவு பெறவுள்ளது. ஈபிள் டவர் உச்சியில் ஒரு மேடை உள்ளது. இங்கு நின்று பாரீஸ் நகர் முழுவதையும் காணலாம். இயற்கை அழகை ரசிக்கலாம். இந்த மேடை வரை செல்ல லிப்ட் வசதி உண்டு.

ஆனால் மேடையின் அளவு மிகச் சிறியது என்பதால் ஒரே நேரத்தில் குறைந்த எண்ணிக்கை பார்வையாளர்களே அனுமதிக்கப்படுகின்றனர்.

இதனால் ஈபிள் டவரின் கீழ்பகுதியில் 1 மணி நேரத்துக்கு மேலாக காத்திருக்க வேண்டியுள்ளது.



இந்த மேடையின் அளவை அதிகரிக்க முடிபு செய்யப்பட்டுள்ளது. இப்பணி பாரீஸை சேர்ந்த 'சிரெர்ரோ ஆர்கிடெக்ஸ்' என்ற நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. 'கார்பன் கெவ்லர்' என்ற எடை குறைந்த வலுமிக்க உலோகப் பொருளை கொண்டு ஏற்கனவே உள்ள மேடையில் புதிய இணைப்பு ஏற்படுத்தப்படுகிறது.

(அ-5)

# நேபாளத்தில் மசூதி மீது குண்டு வீச்சு தொழுகைக்கு வந்த 2 பேர் பலி

(காட்மாண்டு)

நேபாளத்தில் மசூதி மீது குண்டு வீசப்பட்டது. இதில் 2 பேர் பலியானார்கள். பதட்ட நிலை காரணமாக சில பகுதிகளில் ஊடரங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நேபாளத்தின் தலைநகர் காட்மாண்டுவில் இருந்து தென் கிழக்கே 125 மைல் தொலைவில் உள்ளது பிரசாத் நகர். பிரதமர் கிரிஜா பிரசாத் கெய்ராலாவின் சொந்த ஊர் இது. பல்வேறு மதத்தினரும் பல்வேறு இனத்தவர்களும், வெளிநாட்டவர்களும் இங்கு வசிக்கின்றார்கள்.

மாவோயிஸ்ட் தீவிரவாதிகளின் நடவடிக்கைகள் கூட இங்கு இல்லை.

இந்த நிலையில் நேற்று முன்தினம் மாலை மோட்டார் சைக்கி ளில் வந்த இருவர் மசூதி மீது வெடிகுண்டு வீசி விட்டு தப்பி ஓடிவிட்டனர். இந்த தாக்குதலில் மசூதியில் தொழுகை நடத்தி விட்டு வந்தவர்களில் 2 பேர் பலியானார்கள். 2 பேர் காயம் அடைந்தனர்.

இந்தத் தாக்குதலை தொடர்ந்து பிரசாத் நகரில் பதட்டமான சூழ்நிலை உருவாகியுள்ளது. பதட்ட நிலை கார்ணமாக இந்தப் பகுதியில் ஊடரங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த பகுதி இந்தியாவில் எல்லை பகுதியை ஒட்டியுள்ளது.

(அ-5)

# உலக தரிசனம்

# சிம்பாப்வே அதிபர் தேர்தலில் முகாபேவுக்கு பின்னடைவு எதிர்க்கட்சிகள் 65 சதவீத ஓட்டுக்களுடன் முன்னணி

(ஹராரே)

ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான சிம்பாப்வே இங்கிலாந்திடம் இருந்து கடந்த 1980ஆம் ஆண்டு விடுதலை பெற்றது. அதன் பிறகு நடந்த தேர்தல்களில் வெற்றி பெற்று 5முறை அதிபராக இருப்பவர் றொபேட் முகாபே .

இந்த நிலையில் நேற்று முன்தினம் அங்கு அதிபர் தேர்தல் நடைபெற்றது. றொபேட் முகாபே 6ஆவது தடவையாக அதிபர் பதவிக்கு போட்டியிட்டார். அவரை எதிர்த்து எதிர்க்கட்சிகள் கூட்டமைப்பு சார்பில் மோர்கன் வாங்கிரை மற்றும் முன்னாள் நிதி மந்திரி சிம்பா மகோனியும் போட்டியிட்டனர்.

நேற்று முன்தினம் மாலையே ஓட்டு எண்ணிக்கை தொடங்கியது.

முதல் சுற்று வாக்கு எண்ணிக்கையில் எதிர்க்கட்சி வேட்பாளருக்கு அதிக ஓட்டுகள் கிடைத்துள்ளது. அதிபர் றொபேட் முகாபேக்கு இதில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

தேர்தலில் எங்களுக்கு வெற்றி கிடைத்துவிட்டது. இது ஒரு வரலாற்று சாதனை என்று எதிர்க்கட்சிகள் கூறியுள்ளன.

அதிபர் முகாபே யின் சொந்த மாகாணத்தில் கூட அவருக்கு பல இடங்களில் பின்னடைவு ஏற்பட்டு வருகிறது.

அடுத்த சுற்று எண்ணிக்கையில் திடீர் திருப்பம் ஏற்பட்டால் மட்டுமே அதிபர் றொபேட் முகாபே மயிரிழையில் ஜெயிக்க முடியும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

65 சதவீத ஓட்டுகள் பெற்று முன்னிலையில் இருப்பதாகவும் 28 ஆண்டுகள் அதிபராக இருந்த முகாபே பதவி இழக்கப் போகிறார் என்றும் எதிர்க்கட்சிகள் அறிவித்துள்ளனர்.

(அ-5)

# மே மாதத்தில் உலகம் அழியப் போவதாக ரஷ்யாவில் ஓர் அமைப்பு பிரார்த்தனை

(மொஸ்கோ)

வரும் மே மாதத்தில் உலகம் அழியப் போவதாகவும், அதுவரை தனிமையில் பிரார்த்தனையில் ஈடுபடப் போவதாகவும் ரஷ்யாவில் ஒரு அமைப்பு பரபரப்பை ஏற்படுத்தி வருகிறது.

தங்களைத் தாங்களே அழித்துக்கொள்ளும் 'டூம்ஸ்டே' என்ற வழிபாட்டு அமைப்பு ரஷ்யாவில் செயல்பட்டு வருகிறது. இந்த அமைப்பை சேர்ந்தவர்கள் வரும் மே மாதத்துடன் உலகம் அழியப் போவதாகவும் அதுவரை அவர்கள் தனிமையில் பிரார்த்தனை மேற்கொள்ளப் போவதாகவும் தெரிவித்துள்ளனர். இதற்காக கடந்த அக்டோபரில் இருந்து ரஷ்யாவின் பென்சா மலைப்பகுதியில் ஒரு குகையில் வழிபாடு நடத்தி வருகின்றனர். அவர்கள் உலகம் அழியும் வரை இந்த குகையில் இருந்து வெளிவர மாட்டோம் என மறுத்து வருகின்றனர். இவர்களை வெளியே கொண்டு வர துப்பாக்கிச் சூடு நடத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து ரஷ்ய அதிகாரிகள் கூறியிருப்பதாவது, இந்த அமைப்பின் தலைவர் பியோட் குஸ்னெட்ஷோவை வைத்து பேச்சு வார்த்தை நடத்தியதில் குகையில் இருந்து ஏழு பெண்கள் வெளியே வந்துள்ளனர். பியோட்டுக்கு கோர்ட் உத்தரவின் பேரில் மன நல சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. வெளியில் வந்த பெண்கள் அனைவரும் நல்ல உடல்நலத்துடன் இருக்கின்றனர். அவர்களுக்கு மருத்துவ சிகிச்சை எதுவும் தேவையில்லை. இவர்கள் அனைவரும் அவர்களது விருப்பப்படி பியோட் குஸ்னெட்ஷோவின் வீட்டில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

ஆனால் மே மாதம் உலகம் அழியும் என்பதில் அவர்கள் உறுதியுடன் இருக்கின்றனர். அவர்களது கருத்துக்கு மதிப்பளிக்கப்படும். இவர்களை தவிர மேலும் 28 பேர் இன்னும் அந்த குகையில் உள்ளனர். அவர்களை வெளியேற்றுவது குறித்து தொடர்ந்து பேச்சுக்கள் நடைபெற்று வருகின்றன. இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

(அ-5)

# சவுதி பஸ் விபத்தில் 9பேர் கருகிப் பலி

(துபாய்)

சவுதி அரேபியாவில் மஜ்மா அருகே மெக்காவுக்குச் செல்லும் பயணிகளை ஏற்றிக் கொண்டு சென்ற பஸ்ஸூம் எண்ணெய் லொறியும் நேருக்கு நேர் மோதியதில் 9 பேர் உடல் கருகிப்பலியானார்கள்.

அந்த பஸ்ஸில் 20 பாகிஸ்தானியர்கள், 15 இந்தியர்கள் 12 பங்களாதேசத்தைச் சேர்ந்தவர்கள் மற்றும் பகரேன் நாட்டை சேர்ந்த டிரைவர் உட்பட 48 பேர் இருந்தனர்.

அந்த பஸ் ஜலாஜில் நகருக்கு வந்த போது எதிர் எதிராக எண்ணைலொரியும் பஸ்ஸூம் பயங்கரமாக மோதியது.

இதில் அந்த பஸ் தீ பிடித்துக்கொண்டது. பஸ்சில் இருந்தவர்களில் 9 பேர் உடல் கருகி பலியானார்கள்.

25க்கும் மேற்பட்டவர்கள் காயம் அடைந்தனர். இவர்களில் 5 பேர் நிலை கவலைக் கிடமாக உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(அ-5)

# ஐ.நா.மனித உரிமைகள் சபையின் உறுப்பு நாடாக இலங்கை இம்முறையும் தெரிவுசெய்யப்படும்

## மஹிந்த சமரசிங்க நம்பிக்கை

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் உறுப்புரிமை இலங்கைக்கு இந்த முறையும் இடம் கிடைக்குமென இலங்கையின் மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையில் அங்கம் வகிக்கும் 50ற்கும் மேற்பட்ட நாடுகளின் பிரதிநிதிகளை கடந்த வாரம் நியூயோர்க்கில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்திய பின்னரே அவர் இவ்வாறு நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் மீண்டும் உறுப்புரிமையைத் தக்கவைத்துக் கொள்வதற்கு சர்வதேச நாடுகளின் ஆதரவைப் பெற்றக்கொள்ள இந்த விஜயம் முழு ஒத்துழைப்பாக இருந்தது. என அமைச்சர் கூறியுள்ளார். எதிர்வரும் மே மாதம் நடைபெறவிருக்கும் உலகளாவிய ரீதியிலான காலாண்டு ஆய்வுகளை சமர்ப்பிக்கும் மாநாட்டின் பின்னர் நடைபெறும் தேர்தலில் இலங்கை மீண்டும் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் உறுப்பு நாடாகத் தேர்ந்தெடுக்கப்படுமெனக் கூறினார்.

நியூயோர்க்கிற்கு கடந்த வாரம் விஜயம் மேற்கொண்டிருந்த அமைச்சர் மஹிந்த சமரசிங்க, ஐக்கிய நாடுகள் சபையின் 50ற்கும் மேற்பட்ட உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகள் ஐக்கிய நாடுகள் சபையின் அதிகாரிகள் ஆயுத மோதல்களிலிருந்து சிறுவர்களைப் பாதுகாப்பதற்கான ஐக்கிய நாடுகள் சபையின் விசேட பிரதிநிதி ராதிகா குமாரசாமி ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதி ஆகியோரைச் சந்தித்து இலங்கையில் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு அரசாங்கம் எடுத்திருக்கும் நடவடிக்கைகள் குறித்து விளக்கமளித்திருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மனித உரிமை மீறல்கள் குறித்த குற்றச்சாட்டுக்களை முறியடிப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் தமது அரசாங்கம் முன்னெடுத்திருப்பதாக அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையில் மனித உரிமைப் பிரச்சினைகள் உண்டு அவற்றை நாங்கள் மறுக்க முடியாது மனித உரிமை மீறல்கள் தொடர்பாக அரசாங்கம் கூடுதல் கவனம் எடுத்திருப்பதுடன் அவற்றைத் தடுப்பதற்கு முன்னெடுத் திருக்கும் நடவடிக்கைகள் குறித்து விளக்கமளித்து வருகிறது. மனித உரிமை மீறல்களுக்கு எதிராக நாங்கள் நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளோம் என்பதை அவர்களுக்கு விளங்கப்படுத்த நான் முயற்சிக்கின்றேன் என மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க கொழும்பு ஊடகமென்றிடம் தெரிவித்தார்.

எனினும் எதிர்வரும் மே மாதத்தில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் நடை



பெறவிருக்கும் தேர்தலில் ஐ.நா. உறுப்பு நாடுகள் ஆதரவாக வாக்களிப்பார்கள் என்பதை என்னால் உறுதியாகக் கூறமுடியாது.

எனினும் மனித உரிமை விடயங்களில் அவர்களைத் திருப்திப்படுத்த முயற்சிக்கின்றோம். அவை சாதகமான முறையில் முன்னெடுக்கப்படு வதாகவே நான் கருதுகிறேன் என அமைச்சர் மஹிந்த சமரசிங்க மேலும் கூறினார். (அ-5)

# அரச சேவையில் இணைக்க பட்டதாரிகளுக்கு ஆண்டுதோறும் பொதுப் பரீட்சை

## அரச நிர்வாக அமைச்சு ஆலோசனை

(கொழும்பு)

பட்டதாரிகளை அரச சேவையில் இணைத்துக்கொள்ளும் போது ஒரு பரீட்சையை மாத்திரம் நடத்துவது தொடர்பாக அரச நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது. அரச சேவையில் பல்வேறு துறைகளுக்காக புதிய அதிகாரிகளைச் சேர்த்துக் கொள்ளும் போது பல்வேறு தகுதிகாண் பரீட்சைகள் நடாத்தப்படுவதனால் அரசாங்கத்திற்கு பாரிய செலவு ஏற்பட்டுள்ளதாக அமைச்சு தெரிவிக்கின்றது.

இதன் காரணமாக பட்டதாரிகள் மாத்திரமன்றி பரீட்சைகள் திணைக்களமும் பல்வேறு சிக்கல்களை எதிர்நோக்குவதாக அமைச்சு சுட்டிக் காட்டியுள்ளது இதற்கமைய பல்கலைக் கழகங்களில் இருந்து பெறுபேறு வெளியிடப் பட்டதுடன் அரச சேவையில் பட்டதாரிகளை இணைத்துக் கொள்வதற்கான உரிய பரீட்சையை மாத்திரம் நடத்துவதற்கு எண்ணியுள்ளதாக அமைச்சு தெரிவித்தது.

பட்டதாரிகளுக்காக வருடாந்தம் ஒரு பரீட்சையை மாத்திரம் நடத்துவதன் மூலம் சகல தரப்பினரும் நன்மை அடைவார்கள் என்று அரச நிர்வக உள் நாட்டு அலுவல்கள் அமைச்சு மேலும் தெரிவித்தது. (அ-7)

# கிழக்கு மாகாண சபைத்தேர்தலுக்கு 250 மில்லியன் ரூபா செலவாகும்

(கொழும்பு)

கிழக்கு மாகாண சபைத் தேர்தலுக்கு சுமார் 250 மில்லியன் ரூபா செலவாகும் என தேர்தல் செயலக கணக்காய்வாளர் பிரிவு தெரிவித்துள்ளது.

இத் தேர்தலுக்கான செலவு மதிப்பீட்டு அறிக்கையும் இத்தொகையை பெற்றுத் தருமாறு கோரியும் தேர்தல் ஆணையாளர் அலுவலகக் கணக்காய்வாளர் பிரிவு கடித மூலம் திறைசேரிக்கு அனுப்பி வைத்துள்ளது.

இதேவேளை அரசியல் கட்சிகள், வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள் தேர்தல் சமயத்தில் அழைக்கப்பட வேண்டும் என கோரிக்கைகள் விடுக் கப்பட்டால் இத்தொகை மேலும் அதி கரிக்க வேண்டி ஏற்படும் என்றும் தேர்தல் செயலக கணக்காய்வாளர் பிரிவு சுட்டிக்காட்டி யுள்ளது. (அ-5)

# விவசாயத்துறைக்கு முன்னுரிமை அளிக்குமாறு அரசாங்கத்துக்கு ஐ.நா. அறிவுறுத்தல்

(கொழும்பு)

இலங்கையில் விவசாயத்துறை புறக்கணிக் கப்படுவதாக தெரிவித்துள்ள ஐக்கிய நாடுகள் சபை அது குறித்து கவலை வெளியிட்டுள்ளது. விவசாயத்துறை புறக்கணிக்கப்படுவது வறுமைக்கு வழி செய்யும் என்று சுட்டிக் காட்டியுள்ள ஐக்கிய நாடுகள் சபை இலங்கை அரசாங்கத்திடம் விவசாயத்துறைக்கு புத்துயிர் ஊட்ட வேண்டிய அவசியத்தை வலியுறுத்துவதே கொள்கை வகுப்பாளர்களின் முன்னுரிமையாக இருக்கவேண்டும் எனவும் தெரிவிக்கின்றது.

ஆசிய பசுபிக் பிராந்தியத்திற்கான இந்த ஆண்டின் பொருளாதார சமூக ஆய்வறிக்கையை ஐக்கிய நாடுகள் சபை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில் இவ் விபரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

ஆசிய பசுபிக் பிராந்தியத்தின் பொருளாதார நிலை வளர்ச்சியடைந்திருந்தாலும் விவசாயத் துறையில் பின்னடைவையே சந்தித்துள்ளதாக சுட்டிக்காட்டியிருந்தது. இலங்கையில் விவசாயத் துறைக்கு பல சலுகைகள் வழங்கியும் அந்தத் துறையில் உற்பத்தித் திறன் அதிகரிக்கவில்லை என்று ஆய்வாளர் கலாநிதி முத்துக்கிருஷ்ண சர்வானந்தன் தெரிவித்துள்ளார். இதுவே இலங்கை அரசாங்கத்திற்கும் விவசாயிகளுக்கும் பெரும் சவாலாக அமைந்திருப்பதாக ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

விவசாயத்துறையின் பொருளாதார சீர்திருத்தங்களும் விவசாய அணுகுமுறையில் எந்த விதமான சீர்திருத்தங்களும் ஏற்படாதிருப்பதே இதற்கான அடிப்படைக் காரணம் என்று அவர் சுட்டிக்காட்டியதாக ஐக்கிய நாடுகள் சபையின் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-7)

# லிபியாவில் இலங்கைத் தூதரகத்தை நிறுவ ஜனாதிபதி பணிப்பு- கெஹெலிய தெரிவிப்பு

(கொழும்பு)

லிபியாவில் இலங்கைக்கான தூதரகமொன்றை அமைப்பதற்குத் தேவையான உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பணிப்புரை விடுத்துள்ளதாக அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார். இது குறித்து அமைச்சர் மேலும் கூறியுள்ளதாவது,

லிபியாவுக்கு நான் விஜயம் மேற்கொண்டிருந்த போது லிபிய பிரதமர் கலாநிதி மதூக் என் மதூக்கை சந்தித்து பேசினேன். இச் சந்திப்பின் போது லிபியப் பிரதமர் இலங்கையின் தூதரகம் ஒன்றை லிபியாவில் நிறுவ வேண்டும் என்ற கோரிக்கையை என்னிடம் முன்வைத்தார்.

லிபியாப் பிரதமரின் கோரிக்கையை நான் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டுவந்தேன். இதன்போதே ஜனாதிபதி இவ்வாறு பணிப்புரை விடுத்தார். இதன்போது, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, நிதியமைச்சின் செயலாளர் பீ.பி. ஜயசுந்தர ஆகியோரும் இருந்ததாகவும் அமைச்சர் மேலும் கூறியுள்ளார். (அ-5)

# கல்விப்புலத்தில் நிகழ்ந்த அழுத்தமான பதிவு

ஈழத்தில் அதுவும் யாழ்ப்பாணச் சூழலில் குறும் படம் தயாரிக்கும் முயற்சி என்பது சிரமமான ஒன்று. அதற்கான நிதிவளம், தொழில் நுட்பம், களநிலைமை போன்றவற்றின் சாத்தியப்பாடுகள் இன்றைய எமது அசாதாரண வாழ்வியல் சூழலில் வரையறைக்குள்ளாவை. இத்தகைய வரையறைகள், மட்டுப்பாடுகளுக்கு மத்தியிலும் 'வாழும் போதே...' என்கின்ற கல்வி விழிப்புணர்வுக் குறும்படம் அண்மையில் யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் வெளியிடப்பட்டது.

ஆதங்கங்கள், வலிகள், பெற்றோரின் மனப்போக்குகள் என்பன இக் குறும்படத்தில் வெளிக் கொண்டுவரப்பட்டுள்ளன. மாணவர்கள் பாடசாலைகளில் கற்கவேண்டிய வயதில் இடை விலகி விடுதல் என்பது எமது கல்விப்புலத்தில் முனைப் படைந்து வருகின்ற பிரச்சினையாகும். இப்பிரச் சினை பற்றிய சலனங்களைப் பார்வையாளரிடத்தில் ஏற்படுத்தக்கூடிய ஒளியின் கோலங்களாக இக்குறும்படம் காட்சிப்படுத்தப் பட்டுள்ளது.

பொதுவாக பிள்ளைகள் பாடசாலை செல்லாமை, இடைவிலகிவிடுதல் என்பன தொடர்

## "வாழும் போதே..." குறும்படம்

இக் குறும்படம் தருகின்ற ஸ்பரிசமும், அது சாத்தியப்படுத்துகின்ற உடனடியான சமூக விழிப்புணர்வும் அதன் பலவீனங்களையும் கடந்து கல்விச் சமூகத் தில் ஒரு ஈர்ப்பினைத் தக்கவைத்துள்ளது எனலாம். இ.கமலநாதனின் எழுத்துரு, நெறியாள்கையில் வெளிவந்த இக் குறும்படம் எமக்குப் பரீட்சயமான கதைக் களனைக் கொண்டிருந்ததுடன், எமது கல்விப்புலத்தின் மறுபக்கத்தையும் விசாரணைக்குட்படுத்தியுள்ளது.

இம் மண்ணின் போர்ச்சூழல், இடப்பெயர்வு குடும்பவறுமை என்பன தந்த வடுக்களின் பின்னணியில் அதன் தாக்கங்கள் கல்வியிலும் எத்தகைய பின்விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது; கல்வியைப் பெறவேண்டிய வயதில் அதனை இழந்துவிட்ட சிறுவயதினரின் மன

நிகழ்வாகவே உள்ளது. வலயக் கல்வி திணைக்களத்தின் முறைசாராக்கல்விப் பிரிவினரால் இது குறித்து பெற்றோர் மட்டத்தில் ஏற்பாடு செய்யப்படுகின்ற விழிப்புணர்வுச் செயற்பாடுகள் அதன் பலாபலன்கள், அவர் களது வறுமை, இயலாமை, அறியாமை, குடும்ப உறவுச் சிதைவு-பிறழ்வுநிலை என்பவற்றுள் முடங்கிப் போவதும் ஒரு தொடர் நிகழ்வாகவே உள்ளது.

### காலத்தின் தேவையான இம் முயற்சி காத்திரமான பலனை நிச்சயம் தரும்

இந்நிலையில், ஒரு வலுவான ஊடக மான திரைப்படங்கள் மூலம் ஒரு செய் தியை பின் தங்கியுள்ள மக்கள் மத்தியில் பிரச் சாரப்படுத்துவது காத்திரமான பலனை நிச்சயம் தரும்.

இந்நோக்கின் அடிப்படையிலேயே இக் குறும்படம் யாழ்ப்பாண வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அவர் களது தயாரிப்பில் வெளிவந்துள்ளமை பாராட்டதலுக்குரியது. இன்றைய கல்வி முறையினுள் விலகிநிற்கின்ற ஒரு பிரிவினரின் மீது கல்விப் பணிப்பாளர் கொண்டிருக்கின்ற கரிசனையின் வெளிப்பாடே இக் குறும்படமுயற்சி எனலாம்.

கலைத்துவ அழகியல் நியமனங்களின் அடிப்படையில் சில பலவீனங்கள் தென்பட்டாலும், எதிர்காலத்தில் இப்பிரச்சினை குறித்து காத்திரமான வரவுகளுக்கு ஒரு முன் முயற்சியாகவே இக் குறும்படம் கொள்ளத்தக்கது.

இப்படத்தின் சிறப்பு சிறுவர்களின் பாத்திரப் பங்கேற்பாகும். பாத்திரத்தின் புரிதலுடன் நடித்த நடிகர்கள் ஆர்வம் கரைந்து நடித்துள்ளார்கள். குறிப்பாக சிறுவர்களை அவர்களது இயல்பான மொழியில் பேசவைத்தமை சிறப்பானதே. படத்தில் இடம் பெற்ற பாடல்களும், இசையும் பாராட்டும் படியாக உள்ளது. கேதீசின் பின்னணி இசை பார்வையாளர்களுக்குச் சலிப்பூட்டாமல் காட்சிகளுடன் ஒன்றித்து மென்மையான உணர்வுகளைத் தூண்டுவதாக உள்ளது.

மாணியூர் இரட்ணேசின் ஒளியமைப்பும் படத்துக்கு வலுச்சேர்த்துள்ளது. ஒளியமைப்பும் படத்துக்கு வலுச்சேர்த்துள்ளது. ஒளியமைப்பின் காலம்- வெளி, உடல் என்கிற முப்பரிமாண அம்சங்கள் கவனத்தில் கொள்ளப்பட்டமை படத்தில் வெளிப்படுகிறது. காட்சிப்படி மங்கள், குறியீடுகளில் இன்னும் கவனம் செலுத்தியிருக்கலாம் போலத் தெரிகிறது. படத்தின் ஆரம்பத்தில் காட்சிரூபத் தில் தொடரும் குளம், பரந்த வயல் வெளிகள், கிராமிய அடையாளங்கள் என்பன இயல்பான அழகுணர்வை ஏற்படுத்துகின்றன. அந்த அழகியல்வெளிப்பாடு பல்வேறு பரிமாணங்களில் இறுதிவரை வளர்த் துச் சென்றிருப்பின் படத்தின் காத்திரத் தன்மைக்கு இன்னும் வலுச்சேர்ந்திருக்கும். மற்ற வகையில், சில காட்சிளில் வந்த உரையாடல்கள் படத்தின் சாராம்சத்தினை தேவை யற்றவிதத்தில் குழப்பி மிகையான பிரச்சார நெடியினைத் தந்தமை சற்று நெருடலைத் தந்தாலும், படத்தின் நோக்கம் கருதி இக்குறை மன்னிக்கத்தக்கதே. அந்தவகையில் இன்று சமூகத்தின் அடிமட்டத்தில் உருவாகிவரும் கல்விப் பிரச்சினை ஒன்றைச் சொல்ல வந்த இக் குறும்படம் தனது வசீகரத்தினை இழந்துவிடாது வெளிவந்தமை வரவேற்புக்குரியது.

மு. அநாதரட்சகன்

மொத்தத்தில் கல்விபற்றிய தூண்டுதல்களை சமூகத்தில் உருவாக்க முயன்றமை, கல்வியின் முக்கியத்துவத்தைச் சிறுவர்கள் மூலம் பேசவைத்தமை, தீவிரமடைந்துவரும் கல்விப் பிரச்சினை ஒன்றைக்கருப்பொருளாகக் கொண்ட முதல்வரவு என்றவகையில், யாழ். கல்விப் பணிப்பாளரின் முன்முயற்சியில் வெளி வந்த இக் குறும்படம் எமது கல்விப்புலத்தில் நிகழ்ந்த அழுத்தமான பதிவெனலாம்.

# மக்கன்சி, அம்லா சிறப்பான ஆட்டம் முதலாவது டெஸ்ட் சமனிலையானது

(சென்னை)

இந்திய -தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் சமனிலையில் முடிபுற்றது.

இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணி மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகின்றது.



ஆட்டநாயகன் விருதுடன் சேவாக்

தொடரின் முதலாவது போட்டி கடந்த 22ஆம் திகதி சென்னையில் ஆரம்பமானது. இப்போட்டியில் நாணயற்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி அதன் முதல் இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 540 ஓட்டங்களை எடுத்தது.

இதில் அம்லா 159 ஓட்டங்களையும் மக்கன்சி 94 ஓட்டங்களையும் சமித் 74, பௌச்சர் 70 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ஹர்பஜன் சிங் 5 விக்கெட்டுக்களையும் கும்ளே 2 விக்கெட்டுக்களையும் மற்றும் சிறிசாந்,சேவாக் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 627 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இதில் வீரேந்திர சேவாக் 319 ஓட்டங்களையும் ராகுல் ராவிட் 111 ஓட்டங்களையும் மற்றும் ஜாபர் 73 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ஸ்ரையன் 4 விக்கெட்டுக்களையும் மற்றும் நிற்றினி, ஹரிஸ் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து முதலாவது இன்னிங்ஸில் 87 ஓட்டங்களால் பின்னிலையிலிருந்த தென்னாபிரிக்க அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி நேற்று முன்தினம் நான்காம் நாள் ஆட்டநேர முடிபில் ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து 131 ஓட்டங்களை எடுத்திருந்தது.


இதில் மக்கன்சி 59 ஓட்டங்களுடனும் அம்லா 35 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர்.

5-வதும் இறுதி நாளுமாகிய நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி மக்கன்சி, அம்லாவின் சிறப்பான இணைப்பாட்டத்தினால் 5விக்கெட்டுக்களை இழந்து 331 ஓட்டங்களை எடுத்த நிலையில் தனது 2-வது இன்னிங்ஸை இடைநிறுத்தி இந்திய அணிக்கு வெற்றி இலக்காக 245 ஓட்டங்களை நிர்ணயித்தது.



சதம் பெற்ற மகிழ்ச்சியில் மக்கன்சி

இதில் நீல் மக்கன்சி ஆட்டமிழக்காமல் 155 ஓட்டங்களையும் அம்லா 81 ஓட்டங்களையும் எடுத்தனர்.



சுழல் பந்து வீசும் லக்ஸ்மன்

பந்துவீச்சில் ஹர்பஜன் சிங் 3 விக்கெட்டுக்களையும் கும்ளே, சேவாக் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

நேற்றைய இறுதிநாள் ஆட்டம் நிறைவடைய 14 ஓவர்கள் மாத்திரமே உள்ள நிலையில் இரு அணித் தலைவர்களின் விருப்பப்படி இந்திய அணி இரண்டாவது இன்னிங்ஸை ஆடாமலே போட்டி சமநிலை என நடுவரால் அறிவிக்கப்பட்டது.

போட்டியில் ஆட்டநாயகனாக வீரேந்திர சேவாக் தெரிவானார். (5)

## புதிய ஊக்கமருந்து சோதனை நிராகரிப்பு

(பேர்லின்)

புதிய ஊக்கமருந்து சோதனை முறையை ஏற்க உலக ஊக்கமருந்து தடுப்பு மையம் மறுத்துவிட்டது. வரும் ஆகஸ்டில் சீனத் தலைநகர் பீஜிங்கில் ஒலிம்பிக் போட்டி நடக்கவுள்ளது.

இதில் பங்கேற்கும் வீரவீராங்கனைகள் ஊக்கமருந்து பயன்படுத்துவதை தடுக்க கடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கான ஆராய்ச்சியில் ஜேர்மனியைச் சேர்ந்த விளையாட்டுக் கல்லூரியின் ஆசிரியர் மரியோ தேவிஸ் தீவிரமாக ஈடுபட்டு இருந்தார்.

விளையாட்டு வீரர்கள் ஸ்டிராய்ட் உள்ளிட்ட ஊக்கமருந்துகள் உட்கொள்வதை கண்டுபிடிக்க உதவும் புதிய சோதனை முறையை அவர் கண்டுபிடித்தார்.

ஆனால் உலக ஊக்கமருந்து தடுப்பு மையம் அந்த சோதனையை பீஜிங் ஒலிம்பிக் போட்டிகளில் பயன்படுத்த மறுப்புத் தெரிவித்துவிட்டது.

இது குறித்து ஜேர்மனியப் பத்திரிகையில் அளித்த பேட்டியில் தேவிஸ் கூறியுள்ளதாவது,

முன்னாள் அமெரிக்க ஓட்டப்பந்தய வீராங்கனை மரியன் ஜோன்ஸ், இன்சுலின் போன்ற ஊக்கமருந்தை பயன்படுத்தினார். இதனை சோதனையில் எளிதில் கண்டுபிடிக்க முடியாது என்பதால் விளையாட்டுப் போட்டிகளின் போது பயன்படுத்தி வந்தார்.

தற்போதைய புதிய மருத்துவ சோதனையின் மூலம் இன்சுலின் மருந்தை ஊக்கமருந்தாக உபயோகிப்பதை கண்டு பிடிக்கலாம்.

இதனால் ஒலிம்பிக்கில் ஆரோக்கியமான போட்டியை ஏற்படுத்தலாம். எனது புதிய யோசனைக்கு உலக ஊக்கமருந்து தடுப்பு மையம் நிதி உதவி அளித்தது.

தற்போது இந்த சோதனையைப் பற்றி அவர்கள் அறிந்து கொள்ள விரும்பவில்லை. இந்த யோசனையை நடைமுறைக்கு கொண்டுவந்தால் ஒலிம்பிக்போன்ற சர்வதேசப் போட்டிகளில் ஊக்கமருந்தை பயன்படுத்த வீரர்கள் அஞ்சுவார்கள் திறமையை மட்டும் நம்பி களமிறங்கும் விளையாட்டு உணர்வு வீரர்கள் மத்தியில் அதிகரிக்கும். இவ்வாறு மரியோ தேவிஸ் கூறினார். (5)

## 24 மணிநேரத்தில் 200 கி.மீ. பயணம் 7வயது சிறுமி சாதனை

(புதுச்சேரி)

புதுச்சேரி உப்பளத்தைச் சேர்ந் ராஜ்குமார் சுருதி(வயது 7), லிம்கா சாதனைக்காக 200 கி.மீ. தூரத்தை 24 மணி நேரத்தில், ஸ்கேட்டிங் மூலம் கடக்கத் திட்டமிட்டார்.

புதுச்சேரியில் இருந்து மாமல்லபுரம் சென்று மீண்டும் புதுச்சேரிக்கு திரும்பி வரும் வகையில் அவரது பயணம் திட்டமிடப்பட்டது.

பாகிஸ்தானில் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள இந்தியர் சப்ரஜித் சிங்கை மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்ய வேண்டும் என வலியுறுத்தி இந்த ஸ்கேட்டிங் பயணம் நடத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (5)

## இலங்கை அணியில் மின்னும் புதிய நட்சத்திரம் மலிந்த

(கொழும்பு)

மேற்கிந்திய தீவுகளுக்கு கிரிக்கெற் விஜயம் மேற்கொண்டுள்ள இலங்கை கிரிக் கெற் அணியில் புதிதாக இடம்பிடித்துள்ள மலிந்த வர்ணபுர அனைவர் கவனத்தையும் ஈர்த்துள்ளார்.

வர்ணபுர வம்சத்தால் இலங்கை அணிக்கு கிடைக்கப்பெற்ற புதிய நட்சத்திரமாக அவர் திகழ்கிறார். இலங்கையின் முதலாவது டெஸ்ட் அணித்தலைவர் பந்துல வர்ணபுரவின் மூத்த சகோதரரான உபாவி வர்ணபுரவின் புதல்வராவார் மலிந்த.

சிறந்த கிரிக்கெற் வீரர்களில் ஒருவராகத் திகழ்ந்த உபாலி வர்ணபுர தற்போது முதற்தர கிரிக்கெற் போட்டிகளுக்கான ஒரு போட்டி நடுவராக பணியாற்றி வருகின்றார். மேற்கிந்திய தீவுகளில் தமது திறமையை வெளியிட்ட மலிந்த அங்கு நடைபெற்ற பயிற்சிப் போட்டியில் முதலாவது இன்னிங்ஸில் 132 ஓட்டங்களையும் இரண்டாவது இன்னிங்ஸ் அரைச் சதம் ஒன்றையும் பெற்றார். அங்கு நடைபெற்ற டெஸ்ட் போட்டியில் முதலாவது இன்னிங்ஸில் 120 ஓட்டங்களையும் இரண்டா வது இன்னிங்ஸில் 62 ஓட்டங்களையும் பெற்றார்.

பம்பலப்பிட்டி சென்ட் பீட்டர்ஸ் வித்தியாலயத்தின் கிரிக்கெற் வீரராகத் திகழ்ந்த மலிந்த 2007 ஜுன்25ஆம் திகதி டெஸ்ட் போட்டிகளில் விளையாட தகுதி பெற்றார்.

கொழும்பு எஸ்.எஸ்.ஸீ மைதானத்தில் நடைபெற்ற பங்களாதேஷ் அணியுடனான போட்டியில் தமது 28 ஆவது வயதில் இவர் தனது முதல் டெஸ்டில் களம் இறங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது. (5)



அவுஸ்திரேலிய நீச்சல் சம்பியன் போட்டியில் பங்குபற்றுவதற்காக தமது நெற்றியில் கிண்ணம் ஒன்றை வைத்தவாறு பின்னோக்கி நீந்தி சமநிலைப் பயிற்சியில் ஈடுபடுகின்றார் அவுஸ்திரேலிய நீச்சல் வீராங்கனையான கெயிட்லின் சின்க்கிளயர்.

## இந்திய அணியின் இலங்கைப் பயணம் உறுதி

(கொழும்பு)

இந்திய அணி ஜுலை மற்றும் ஆகஸ்ட் மாதத்தில் இலங்கையில் சுற்றுப்பயணம் செய்வதை அந்நாட்டு கிரிக்கெற்சபை உறுதி செய்துள்ளது.

ஜுலை மற்றும் ஆகஸ்ட் மாதத்தில் இலங்கையுடன் மூன்று டெஸ்ட் போட்டிகள் மற்றும் 5 ஒருநாள்போட்டிகளில் இந்தியா விளையாடுகிறது. போட்டிக்கான திகதிகள் மற்றும் இடங்களையும் இலங்கை கிரிக்கெற்சபை அறிவித்துள்ளது.

ஜுலை 23ஆம் திகதி முதல் டெஸ்ட் போட்டி கொழும்பில் ஆரம்பமாகிறது. இரண் டாவது போட்டி 31ஆம் திகதி காலியிலும் 3 ஆவது டெஸ்ட் ஆகஸ்ட் 8ஆம் திகதி கொழும்பிலும் ஆரம்பமாகிறது.

ஆகஸ்ட் 18, 20, 24, 26, 29ஆம் திகதிகளில் ஒருநாள் போட்டிகள் நடக்கிறது. முதல் இரண்டு போட்டிகள் தம்புள்ளவில் பகல் ஆட்டமாகவும், இறுதி மூன்று போட்டிகள் கொழும்பில் பகலிரவு ஆட்டமாகவும் நடைபெறுகிறது. (5)

# அமெரிக்கக் கல்வி

## ஓர் பார்வை

### நுழைவுத் தேர்வுகள்

அமெரிக்காவில் கல்வி பயில ஆங்கில அறிவு அடிப்படையான தேவையாகும். அடிப்படைப் படிப்பில் எவ்வளவு திறமை பெற்றிருந்தாலும் நல்ல ஆங்கில அறிவைப் பெற்றிருந்தால் மட்டுமே படிக்கும் வாயப்புக் கிடைக்கும். இந்தத் திறனை அறிய டோபல் தேர்வில் கட்டாயம் தகுதி பெற வேண்டும். இதைத் தவிர அந்தந்த கல்வி நிறுவனங்களும் சாட்/ ஆக்ட் போன்ற தேர்வுகளில் தகுதி பெறுபவருக்கே கல்வி வாய்ப்பைத் தருகின்றன. இவற்றை எழுதிய பின் ஒருமாதம் கழித்து நாம் தேர்வு செய்துள்ள கல்லூரிகள்/ பல்கலைக் கழகங் களுக்கு பெற்ற மதிப்பெண்கள் அனுப்பி வைக்கப்படும். இது பற்றிய தகவ லைப் பெற்ற வுடனேயே விண்ணப்பிப்பது ஆரம் பிக்கப்படும்.

### விண்ணப்பங்கள் பெறுவது எப்படி?

பொதுவாக அமெரிக்க கல்வி நிறுவனங்கள் வெளிநாட்டு மாணவருக்கென்று பிரத்தியேகமான விண்ணப்பங்களை வடிவமைத்துள்ளன. எனவே விண்ணப்பிக்கும்போது வெளிநாட்டு மாணவர் என்பதை குறிப்பிடுவது அவசியம். நாம் சேர விரும்புவதற்கு கிட்டத்தட்ட ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பே விண்ணப்பிக்க வேண்டியிருக்கிறது. இப்போதெல்லாம் இன்டர்நெட்டில் இதைப் பெற முடிந்தாலும் விண்ணப்பங்களை ஏர்மெயில் மூலமாகத்தான் பெறமுடிகிறது என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

பாடசாலைக் கல்வியைப் பொறுத்தவரை விண்ணப்பம் பற்றிய விசாரணைகளை Direct of Undergraduate Admission USம் பட்டப்படிப்பு பற்றிய விபரங்களுக்கு துறைத் தலைவருக்கு அல்லது பட்டப்படிப்புக்கான டீன் அல்லது டைரக் டரேட் அப் கிராஜுவேட் அட்மிஷன் ஸ்க்கும் எழுத வேண்டும்.

### விண்ணப்பம் பெற குறிப்பிட வேண்டியவை

✦ பெயர் மற்றும் குடும்பப் பெயர், குடும்பப் பெயரானது கபிட்டல் எழுத்துக்களில் எழுதப்பட வேண்டும்.

✦ பிறந்த திகதியை அமெரிக்க முறைப்படி மாதம்/திகதி/ ஆண்டு என்பதாக குறிப்பிட வேண்டும். ஜுலை 16,1988இல் பிறந்த ஒருவர் இதை 07/16/1988 எனக் குறிப்பிட வேண்டும்.

✦ நமது முழு அஞ்சல் முகவரியை தெளிவாகக் குறிப்பிடவேண்டும்.

✦ தேசிய இனம் மற்றும் பாஸ்போர்ட் வழங்கும் நாட்டின் பெயரையும் எழுதவேண்டும்.

✦ நமது படிப்பில் எதுவரை அல்லது எத்தனை ஆண்டுகள் ஆங்கிலத்தைப் படித்திருக்கிறோம் என்பதையும் தெரிவிக்க வேண்டும். இவற்றில் எதை எழுத மறந்து விட்டாலும் அப்போது நமது விசாரணைகளுக்கு நிறுவனங்கள் பதிலளிப்பதில்லை என்பதை மனதில்கொள்ள வேண்டும்.

### விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டியவை:

✦ தயார் செய்த கட்டுரை, ✦ தகுதிகளுக்கான சான்றிதழ்கள்/மதிப்பெண் பட்டியல்கள் இவற்றின் நகல்கள், ✦ வேறு மொழியில் நமது பங்களிப்பு இருந்தால் அதற்கான சான்றிதழ்கள், ✦ டோபல் போன்ற தேர்வில் பெற்ற மதிப் பெண் சான்றிதழ், ✦ பிற நுழைவுத் தேர்வு தகுதிக்கான சான்றிதழ், ✦ நிதிநிலை/ நிதி ஆதாரம் போன்றவற்றுக்கான விரிவான அறிக்கை

### சிறந்த பல்கலைக்கழகங்கள்

*கிளிவ்லாண்ட் ஸ்டேட் பல்லைக்கழகம்*

அமெரிக்காவில் ஓகியோ மாகாணத்தில் 1964 இல் ஆரம்பிக்கப்பட்டது. இந்த பல்கலைக் கழகம் இதில் ஒரு இலட்சத்து 6ஆயிரம் மாணவர்கள் பயிலுகின்றார்கள். இங்கு 200பிரிவுகளில் பல்வேறு படிப்புகள் தரப்படுகின்றன.

**முக்கிய பாடப் பிரிவுகள்**

லிபரல் ஆர்ட்ஸ் மற்றும் சோசியல் சயன்ஸ், தொழில்நிர்வாகம், இன்ஜினியரிங், கல்வியியல், நகர்ப்புற மேம்பாடு,சட்டம்.

தொழில் அரங்கில் சிறந்த தலைவர்களை உருவாக்கவும் போட்டியைச் சந்திக்கும் திறமைக் கமைய அவர்களுக்கு ஊட்டவும் தனித்தன்மை வாய்ந்த சிறப்புப் பிரிவுப் படிப்பை உலகிலேயே இந்தப் பல்கலைக்கழகம் மட்டுமே தருகின்றது. இங்கு பயிலும் ஆசிய மாணவர்கள் பொதுவாக எலக்ட்ரிக்கல் இன்ஜினியரிங், கம்பியூட்டர் மற்றும் தகவல் தொழில்நுட்ப அறிவியல், மெக்கானிக்கல் இன்ஜினியரிங்,இன்டஸ்ட்ரியல் இன்ஜினியரிங், தொழில் நிர்வாகவியல் என்ற ஐந்து பிரிவுகளையே பெரிதும்தேர்ந்தெடுத்து படிக்கின்ற னர். இந்த பல்கலைக்கழகம் அமெரிக்காவின் சிறந்த இருபது ஆய்வுத்துறைக்கான பல்கலைக்கழகத்தின் பத்தாவது இடத்தில் உள்ளது என்பது குறிப்பிடத் தக்கது.



இதன் இணையத்தள முகவரி

www.csuohio.edu/internet/admissions

*அமெரிக்காவின் சிறந்த இன்ஜினியரிங்கல்வி நிறுவனங்கள்*

*மசாசூசெட்ஸ் இன்ஸ்டிடியூட் ஒப் டெக்னொலஜி*

(Massachusets Institute of Technology)

http:// web.mit.edu

இதன் பயிற்றுவிக்கும் திறனும் ஆய்வுக்கான வாய்ப்புகளும் இதை சிறந்த இன்ஜினியரிங் நிறுவனங்களில் ஒன்றாக விளங்கச் செய்கிறது. பல்வேறு கல்வித் துறைகளையும் பிரிவுகளையும் கொண்டிருக்கிறது இந்த பல்கலைக்கீழகம்.

*ஸ்டான்போர்ட் பல்கலைக்கழகம்*

(Stanford University)

http://soe.standford/edu

இதன் ஆய்வகங்களும் நூலகங்களும் பிரசித்திபெற்றவை. கல்விக்கான உதவித் தொகையைத் தருவதிலும் இது முன்னணியில் உள்ளது.

*கலிபோர்னியா பல்கலைக்கழகம்*

(University of California Berkeley)

http:// www.berkeley.edu

உலகத் தரம் வாய்ந்த கல்வி மற்றும் ஆய்வுப் படிப்பைத் தருவது இந்தப் பல்கலைக்கழகம் தான். 2இலட்சத்து 14 ஆயிரம் மாணவர்க ளையும் மொத்தமாக ஒரு இலட்சத்து 70 ஆயிரம் ஆசிரியர் மற்றும் ஊழியர்களைக் கொண்டிருக்கிறது இந்த பல்கலைக்கழகம். இதன் பழைய மாண வர் எண்ணிக்கையே 15இலட்சம்ஆகும்.

*ஜியார்ஜியா இன்ஸ்டிடியூட் ஒப் டெக்னோலஜி*

(Georgia Institute of Technology)

http://www.gatech.edu

அமெரிக்காவின் தலைசிறந்த ஆய்வகக் கல்வி நிறுவனம் இது என்றால் மிகையாகாது. மேம்பட்ட அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் உதவியால் மனித வாழ்வை சிறப்புறச் செய்வதை இந்தப் பல்கலைக்கழகம் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. பட்டப்படிப்புகள்,பட்ட மேற்படிப்புகள்,இளநிலை பட்டப்படிப்புகள் மற்றும் ஆர்க்கிடெக்சர் படிப்பு எனப்பல்வேறு கல்வி வாய்ப்புகளை இது தருகிறது. இன்ஜினியரிங், கம்பியூட்டர், மனோஜ்மென்ட் என இதன் அனைத்துப் படிப்புகளுமே புகழ்பெற்றவை.

*கார்னேகி மெலன் பல்கலைக்கழகம்*

(Carnegia Melon University)

www.cmu.edu,

வாய்ப்புகள் என்றால் கார்னேகி மெலன் பல்கலைக்கழகம் தான் பலருக்கு ஞாபகத்துக்கு வருகிறது. பைன் ஆர்ட்ஸ், லிபரல் ஆர்ட்ஸ், டெக்னொலஜி, அறிவியல் என அனைத்திலுமே புதுமையான படிப்புகள் பல தரப்படுகின்றன.

*கலிபோர்னியா இன்ஸ்டிடியூட் ஒப் டெக்னொலஜி*

(California institute of Technology)

www. calltech.edu

அறிவியல் மற்றும் இன்ஜினியரிங் பிரிவு படிப்புகள் இதன் சிறப்பம்சமாக விளங்குகின்றன. லைப் சயின்ஸ் மற்றும் ஹியூமன் சயின்ஸ் ஆகியவற்றை இணைத்து கம்பியூட்டர் இன்ஜினியரிங்குடன் ஒரு படிப்பாக இங்கு படிக்க முடியும். கணிதம், அறிவியல் அல்லது இன்ஜினியரிங் ஆகியவற்றில் தீராத ஆர்வமுள்ளவருக்கு இது உன்னத கல்வி நிறுவனமாக திகழும்.




*தெற்கு கலிபோர்னியா பல்கலைக்கழகம்*

(University of Southern California)

http://viterbi.usc.edu

தேசிய இன்ஜினியரிங் நிலையத்தின் 27 உறுப்பினர்களை தன்னகத்தே கொண்டுள்ளது. இந்துப் பல்கலைக்கழகம் பல தேசிய விருதுகளைப் பெற்றுள்ள இந்துப் பல்கலைக்கழகம் அமெரிக்காவின் ரொப் 10 பல்கலைக்கழகங்களில் ஒன்று. முக்கியமான இன்டர்நெட் தொழில்நுட்பங்களை உருவாக்கிய பெருமையும் இதற்கு உண்டு.

*மிச்சிகன் பல்கலைக்கழகம்*

(University of Michigan)

www.umich.edu

ஆய்வுக்காகவும் கல்விக்காவும் உலகெங்கும் அறியப்படும் பல்கலைக்கழகம் இது. பட்டப் படிப்புகள், பட்டமேற்படிப்புகள் மற்றும் இளநிலைப் பட்டப்படிப்புகள் ஆகியவை புதுமையாக வடிவமைக்கப்பட்டு நடத்தப்படுகின்றன. மிக அழகிய இயற் கைச் சூழலில் அமைந்துள்ளது இந்துப் பல்கலைக்கழகம்.



*கார்னெல் பல்கலைக் கழகம்*

(Cornell University)

www.cornell.edu

இதன் பல்வேறு கல்லூரிகள், பாடசாலைகள் மற்றும் பிற மையங்களில் மொத்தம் 4 ஆயிரம் படிப்புகள் நடத்தப்படுகின்றன. 70 இள நிலைப் பட்டப்படிப்புப் பிரிவுகளும், 93 பட்டப் படிப்புப் பிரிவுகளும் நடத்தப்படுகின்றன. தொலை தூர படிப்புகளும் தரப்படுகின்றன. பிஸ்னஸ் மனேஜ்மென்ட், மருத்துவம், சட்டம், கால்நடை மருத்துவம் போன்ற பிரிவுகளிலும் படிப்புகள் தரப்படுகின்றன.

### அமெரிக்க மருத்துவப் படிப்புகள்:

அமெரிக்காவில் மருத்துவப் படிப்புகளைப் படிக்க விரும்புவோர் படிக்க விரும்புவதற்கு சில ஆண்டுகளுக்கு முன்னரே அதற்கான முயற்சிகளை ஆரம்பிக்க வேண்டும். பரிந்துரைக் கடிதம், படிப்பதற்கான நோக்கம் ஆகிய அறிக்கைகளை சமர்ப்பிப்பது முக்கியம்.

மருத்துவக் கல்லூரி நுழைவுத் தேர்வில் கலந்து கொண்டு வெற்றி பெறுவதும் அவசியம். அமெரிக்காவில் மருத்துவப் படிப்புப் பயில குறைந்த பட்சம் ஒரு ஆண்டாவது பின்வருவனவற்றைப் படித்திருப்பது அவசியமாகும். பொது உயிரியல், ஆய்வகப் பயிற்சியோடு கூடிய இயற்பியல், ஆய்வகப் பயிற்சியோடு கூடிய வேதியியல், கால்குலஸ் மற்றும் ஆங்கிலம்.

**R.U.பாலமுருகன்**

அமெரிக்காவில் எம்.பி.பி.எஸ்., படிப்புக்குப் பின் டாக்டராக பயிற்சி செய்ய தனியாக உரிமம் பெறுவது கட்டாயமாகும். திறன்,புரிந்துகொண்டிருக்கும் தன்மை மற்றும் நோயாளிகளை மையமாகக் கொண்ட பிற திறன்கள் ஆகியவற்றைப் பெற்றிருப்போரே டாக்டராக பயிற்சி செய்ய முடியும். அமெரிக்காவில் மருத்துவப் படிப்பை மேற்கொள்பவருக்கு குறிப்பிட்ட சில நிதி உதவியும் தரப்படுகிறது.

### அமெரிக்கக் கல்விக்கான தேர்வு - ஒரு அறிமுகம்

சேட்(ஸ்கொலஸ்டிக் ஆப்டிடியூட்டெஸ்ட்)

கொலிஜ் போர்ட் என்னும் அமைப்பா் நடத்தப் படும் இத் தேர்வை பட்டப்படிப்பு படிக்க விரும்பும் அனைவரும் எழுதவேண்டும். இதற்கான பதிவை பக்ஸ்/ இமெயில் /ஒன்லைன் (www.collegeboard.com) மூலமாக செய்து கொள்ளலாம். தேர்வுக்கு 7 நாள் முன்னதாக தேர்வு பற்றிய அறிவிப்பு நேரடியாகத் தரப்படும். இந்தத் தேர்வானது மொத்தம் 1,600 மதிப்பெண்களுக்கு நடத்தப்படுகிறது.

பெறப்படும் மதிப்பெண் விபரம் தேர்வு செய்துள்ள அமெரிக்கக் கல்லூரி களுக்கு அனுப்பப் படுகிறது. இந்தத் தேர்வானது 2 தாள்களாக நடத்தப்படுகிறது. ரீசனிங், சென்ட ன்ஸ் கம்ப்ளீசன்,கணிதம் ஒப்புநோக்குதல் ஆகியவை ஒரு தாளாகவும் எதை அமெரிக்கா வில் படிக்க விரும்புகிறோமோ அதில் மற்றொரு தாளும் நடத்தப்படும்.

# மருத்துவம் சார்ந்த படிப்புகள் படித்தால் என்ன வேலை கிடைக்கும்?

உலகம் முழுவதும் அதிகரித்து வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப புதிது,புதிதாக நோய்களும் தோன்றி வருகின்றன. அதனால், அவற்றைக் குணமாக்க புதிய மருந்துகள் கண்டு பிடிக்கப் பட்டு வருகின்றன. அதற்கேற்ப புதிய மருத்துவ சிகிச்சை முறைகளும் பின்பற்றப்படுகின்றன. இதுபோன்ற சிகிச்சைகளை அளிக்க தேர்ச்சி பெற்ற நிபுணர்களை உருவாக்க வேண்டிய பொறுப்பு மருத்துவத்துறைக்கு ஏற்பட்டுள்ளது. அதனால், மருத்துவம் சார்ந்த படிப்புகளை ஏராளமான கல்வி நிறுவனங்கள் அளித்து வருகின்றன. அதுபோன்ற படிப்புகளில் ஒரு சிலவற்றைப் ப்ார்ப்போம்.

### ஓடியாலஜிஸ்ட், ஸ்பீச் அண்டு லாங்குவேஜ் தெரபி

மொழியைக் கற்றுக்கொள்ளவும்,பேசவும் `கேட்கும் திறன்' மிகவும் முக்கியம். இதில் ஏற்படும் குறைபாடுகளைப் பற்றிய படிப்பே ஆடியாலஜி, நோயாளிக்கு கேட்கும் திறனில் ஏற்பட்ட குறைபாடுகளைக் கணித்து, அவர்களைப் பழைய நிலைக்கு மீட்பது பற்றி ஓடியாலஜியில் கற்றுத் தருகின்றனர். குழந்தைகளே பெரும்பாலும் நோயாளிகளாக உள்ளனர்.

விபத்து,நோய்,உளவியல் ரீதியான பாதிப்புகளால் பேச்சுக் குறைபாடுகளை சந்திக்கும் பெரியவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது. சரியாகப் பேசவும்,கேட்கவும் இயலாதவர்களுக்கும் மொழியைக் கையாளுவதில் சிரமப்படுபவர்களுக்கும் திக்குவாய், உச்சரிப்புக் குறைபாடு, பேசக் கற்றுக்கொள்ளச் சிரமப்படும் குழந்தைகளுக்கும், குரல்வளை நீக்கப்பட்டவர்களுக்கும் பேச கற்றுக்கொடுக்கின்றனர். ஓடியாலஜிஸ்ட் ஓடியோ மீற்றரை உபயோகிக்கின்றனர்.

இதன் மூலமாக எந்த அளவு உரத்த சத்தத்தை நோயாளிகளால் கேட்க முடிகிறது என்பதையும், ஒலிகளை வேறுபடுத்த முடிகிறதா என்பதையும் இவர்கள் அறிகின்றனர். இதன்மூலமாக குறைபாட்டின் அளவையும், தீவிரத்தையும் கண்டுபிடிக்கின்றனர். நோயாளிகளின் தனிப்பட்ட, உளவியல் ரீதியான தகவல்களுடன் இவற்றை ஒப்பிட்டு, சிகிச்சை பற்றிய முடிவெடுக்கின்றனர்.



இதற்கான சிறப்புக் கருவிகளின் உதவியுடன் பேச்சுச்சோதனை நடத்தி குறைபாடுகளைப்பதிவுசெய்து கொள்கின் றனர். முழுவதுமாக பேசும் திற னை இழந்து விட் டவர்களுக்கு சை கை மொழி கற்று த்த ருகின்றனர். மற்றவர்களுக்கு ஒலிகளைஉரு வாக்குவது, குர லை மேம் படுத்துவது, மொழித்திறனை அதிகரிப்பது பற்றியும் கற்றுத் தருகின்றனர். நோயாளிகளுக்கு மட்டுமல்ல, அவர்களின் குடும்பத்தினருக்கும், நோயாளிகளுக்கு கொடுக் கப்பட்டிருக்கும் சிகிச்சைக்கு ஏற்ப அவர்களுடன் பழக வேண்டிய முறை பற்றி அறிவுரைதருகின்றனர். ஒரு சில குறிப் பிட்ட நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மட்டுமே ஓடியாலஜி, லாங்குவேஜ் அண்டு ஸ்பீச் தெரபிஸ்ட் சிகிச்சை அளிக்கின்றனர். நரம்பியல் பாதிப்பு, கேட்கும் திறன், கற்கும் திறன் குறைபாடு கொண்டவர்களுக்கே இவர்களால் உதவ முடியும்.

ஸ்பீச் பேட்டர்ன்ஸ், பேத்தாலஜி, ஹியரிங் எய்ட் தெராபிடிக்ஸ், பொனிட் டிக்ஸ், அனாட்டமி, பிசியலஜி, சைக்காலஜி, நியூராலஜி, ஓடியாலஜி, பிசிக்ஸ் ஒப் சவுண்ட், டிசீஸ் ஒப் த இயர், நோஸ் அண்டு துரோட் போன்ற பாடங்கள் ஓடியாலஜி, ஸ்பீச் அண்டு லேங்குவேஜ் தெரபியில் கற்றுத் தருகின்றனர். படிப்பின் போதே செய்முறை பயிற்சியும் கொடுக்கப்படுகிறது. முதலில் நோயாளிகளுக்கு சிகிச்சை தருவ தைக் கவனிக்கவும், பின் சிகிச்சையின் போது தெரபிஸ்ட்களுக்கு உதவி செய்யவும் அனுமதிக்கின்றனர்.

ஓடியாலஜிஸ்ட், ஸ்பீச் அண்டு லேங்குவேஜ் தெரபிஸ்ட்களுக்கு ஆஸ்பத்திரி, உடல் ஊனமுற்றவர்களுக்கான சமுதாக் கூடங்கள், நல வாழ்வு மையங்களிலும் வேலைவாய்ப்புக்கள் உள் ளன. தனியாக கிளினிக் அமை த்து சிகிச்சை அளிக்கவும் முடி யும். பெரிய தொழிற்சாலைகள் ஒலி மாசுபாடு குறித்து கண்காணிக்க இவர்களை பணிக்கு அமர்த்துகின்றனர். இதில் முது கலை பட்டம் பெற்றவர் ஆசிரியராகவோ, ஆய்வாளராக வோ, நிர்வாக பொறுப்புகளிலோ பணி யாற்ற முடியும்.

### ஆக்குபேஷனல் தெரபி

உடல்நலம்,மனநலம்பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிப்பது ஆக்குபேஷனல் தெரபி. வயதாவதாலோ, வேறு பாதிப்புகளாலோ ஏற்படும் உடல்நல,மனநலக் கோளாறுகள், நோயாளிகளை பிறருக்கு சுமையாக மாற்றிவிடுகின்றன. தங்களாலும் இயல்பான வாழ்க்கையைத் தொடர முடியும் என்ற நம்பிக்கையை இவர்களுக்கு அளிக்கவேண்டும். சாப்பிடுவது, உடை மாற்றுவது போன்ற அன்றாட தேவைகளுக்காக நோயாளிகள் யாரையும் சார்ந்திருக்காமல் வாழ்க்கையை மேற் கொள்ள இவர்களுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட சிறப்பு சிகிச்சைகள் அளிக்கப்படுகிறது. சிகிச்சைஅளிக் கும்விடயத்தில் டாக்டர்கள், பிசியோ தெரபிஸ்ட் களுடன் ஆக்கு பேஷனல் தெரபிஸ்ட் இணைந்து பணியாற்றுகின்றனர். நோயளிகளுக்கு ஏற்றபடி சிகிச்சை முறைகள் மாறுபடுகின்றன. அவர்களைப் பற்றிய பின்னணித் தகவல்களைத் தெரிந்து கொள்வது அவர்களுக்கான சிகிச்சையைத் திட்டமிட உதவும்.

ஊனமுற்ற குழந்தைகள்,செயற்கை உறுப்பு கள் பொருந்தியவர்கள், குறைப் பிரசவ சிசுக்கள், நரம்பியல் பாதிப்புகளால் சிரமப்படுபவர்களுக்கு ஆக்குபேஷனல் தெரபி உதவுகிறது. செயற்கை உறுப்புகளை பயன்படுத்தவும் குறிப்பிட்ட தசைகளின் இழந்த செயற்பாடுகளை மீட்கவும், ஆக்குபேஷனல் தெரபிஸ்ட் சிகிச்சை அளிக்கின்றனர்.

மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கும், நிரந்தரமாக ஊனமுற்றவர்களுக்கு கைவினைப் பொருட்கள் செய்யவும், அன்றாட வேலைகள் செய்யவும் பயிற்சி அளிக்கின்றனர்.

இதுபோன்ற வேலைகள் மூட்டுப் பகுதிகளையும், தசைகளை யும் வலிமையாக்குவதுடன், பாதிக்கப்படாத உறுப்புகளுக்கு பயிற்சியாகவும் அமைகிறது. நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க, புதிய உபகர ணங்கள் வடிவமைக்க, தொழில்நுட்ப ஆலோ சனைகளாகவும் பணியா ற்றுகின்றனர்.



பயிற்சியாளராகவும், ஆசிரியராகவும்கூட இவர்களால் பணியாற்ற முடியும். ஆக்குபேஷனல் தெரபி டிப்ளோமா கோர்சாக படிக்கும் போது அனாட்டமி, பிசியாலஜி உள்ளிட்ட பாடங்கள் கற்றுத் தரப் படுகின்றன. மருத்து வமனையில் செய்முறைப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

> வேண்டுமென்றே செய்யப்பட்ட தவறு மன்னிக்கப்படக் கூடாததாகும்.
>
> —அப்துற் ரஹீம்

வலம்புரி

## சந்திரிகா அம்மையாருக்கு ஏற்பட்ட காலம் கடந்த ஞானம்

இலங்கையில் இராணுவ ஆட்சி ஏற்படும் அபாயம் இருப்பதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறியுள்ளார்.

கூடவே, தனது ஆட்சிக் காலத்தில், ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியின் அரசைக் கலைத்தது பெருந் தவறு என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சந்திரிகா குமாரதுங்கவுக்கு ஏற்பட்ட இந்த ஞானம் காலம் கடந்ததாயினும் அந்த ஞானம் ஏற்படக் காரணமென்ன என்பதும் இங்கு நோக்குதற்குரியது.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் பண்டாரநாயக்க குடும்பத்துக்கு அரச குடும்பம் என்ற கௌரவம் உண்டு.

நாட்டின் பிரதமராக எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க பதவி வகித்தார். அதனைத் தொடர்ந்து அவரது துணைவியார் சிறிமாவோ பண்டாரநாயக்க பிரதமரானார். சிறிமாவின் பிரதமர் பதவி உலகின் முதற் பெண் பிரதமர் என்ற பெருமையையும் ஈட்டிக் கொடுத்தது.

பின்னாளில் சந்திரிகா குமாரதுங்க நாட்டின் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியாக பத்து வருடங்கள் பதவி வகித்தார்.

அவர் ஜனாதிபதியாக இருந்தபோது அவரது தாயார் சிறிமாவோ பண்டாரநாயக்க பிரதமராக பதவி வகித்தார்.

மகள் ஜனாதிபதியாகவும் தாய் பிரதமராகவும் இருந்த பெருமையும் பண்டாரநாயக்க குடும்பத்தையே சாரும். இத்தகைய பெருமைக்குரிய பண்டாரநாயக்கவின் அரசியல் அஸ்தமனம் சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியாக பதவியிலிருந்து இறங்கியதுடன் ஆரம்பமாகியது.

அந்த அஸ்தமனத்தின் தொடக்கத்தை முறியடிப்பதில் சந்திரிகா முயற்சி செய்த போதிலும், அதற்கு பெரும் முட்டுக்கட்டையாக தற்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இருந்தார். சந்திரிகா நம்பியிருந்த – அவரின் விசுவாசிகளாக காட்டிக் கொண்டவர்களும் பதவியிறங்கிய கையோடு வெளியேறத் தொடங்கினர்.

அரசியலில் இப்படியொரு இழப்பு தனக்கு ஏற்படும் என்பதை சந்திரிகா அம்மையார் இம்மியும் சிந்திக்காத நிலையில், அநுரா பண்டாரநாயக்கவின் மறைவு பண்டார நாயக்க குடும்பத்தின் வீழ்ச்சியை முற்றுப் பெறச் செய்தது.

இந்த இழப்புக்களையெல்லாம் சீர்தூக்கி ஆராய்ந்தபோதுதான் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியைக் கலைத்தது பெரும் தவறு என்ற உண்மையை அவரால் உணர முடிந்தது.

நாட்டில் யுத்தம் நீடிப்பதற்கும், மனித உயிர்கள் அழிந்து நாடு பேரவலத்தை சந்திப்பதற்கும் தனது நடவடிக்கை காரணமாகிவிட்டதென்னும் உறுத்தல் அவரை வருத்த அவர் தான் விட்ட தவறை வெளிப்படையாகக் கூறியுள்ளார்.

என்ன செய்வது? கண்கெட்ட பின் சூரிய நமஸ்காரம் சாத்தியமாகுமா? என்ன?

# திஸ்ஸநாயகத்தை விடுதலை செய்யுமாறு ஐந்து ஊடக அமைப்புக்கள் வலியுறுத்து

(கொழும்பு)

ஊடகவியலாளர் திஸ்ஸநாயகம் மீது குற்றச்சாட்டுக்கள் இருந்தால் அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த வேண்டும். இல்லாவிடின் அவரை உடனடியாக விடுதலை செய்யவேண்டும் என்று இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம், ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம், இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், சுதந்திர ஊடக அமைப்பு ஊடகத் தொழிற்சங்கங்களின் சம்மேளம் ஆகியன அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளன.

ஐந்து ஊடக அமைப்புக்கள் இணைந்து விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழ் ஊடகவியலாளரான ஜே.எஸ். திஸ்ஸ நாயகமும் அவரால் நடத்தப்பட்ட அவுட்ரிச் எஸ்.எல். இணையதள அலுவலகம் மற்றும் அச்சகம் இயங்கிய கட்டத்தின் உரிமையாளர் வி.ஜெசீதரன் மற்றும் அவரது மனைவி ஆகியோர் கைது செய்யப்பட்டு தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டிருப்பது குறித்து எமது அமைப்புகள் கவலையடைந்துள்ளன.

பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினால் திஸ்ஸநாயகம் தடுத்து வைக்கப்பட்டு இரண்டு வாரங்களுக்கு மேலாகின்றன. அவர் பயங்கரவாத தடுப்பு பிரிவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். இந்த இடம் தொடர்பாக 2007 அக்டோபரில் இலங்கைக்கு விஜயம் செய்த ஐக்கிய நாடுகள் சபையின் விசேட பிரதிநிதி மென்பிரெட் நொவத் தமது அறிக்கையில் மனிதாபிமானமற்ற இடமெனத் தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்டதிலிருந்து இதுவரை ஊடகவியலாளர் திஸ்ஸநாயக்கதிடம் அவர் ஏன் கைது செய்யப்பட்டார் என தெரிவிக்கப்படவில்லை. அத்துடன் அவரை தடுத்து வைக்கும் ஆணை பிறப்பிக்கப்பட்டிருந்ததா இல்லையா என்பது கூட தெரிவிக்கப்படவில்லை. அவருடன் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்ட மூவர் 13 தினங்களுக்கு பின்னர் எதுவித குற்றச் சாட்டுகளுமின்றி விடுவிக்கப்பட்டனர்.

திஸ்ஸநாயகமும் ஏனையோரும் இவ்வாறு நீண்ட நாட்கள் தடுத்து வைக்கப்பட்டிருப்பதன் மூலம் இலங்கையில் தமிழ் ஊடக செயற்பாட்டாளர்கள் முகம் கொடுக்கும் இழி நிலையை எடுத்துக்காட்டுகிறது. 2006இல் சிவில் மோதல்கள் தீவிரமடைந்ததிலிருந்து இதுவரை காலமும் நாட்டின் வடக்கு கிழக்கு பிரதேசத்தில் ஊடகவியலாளர்களின் குரல் வெகுவாக நசுக்கப்பட்டுள்ளது.

ஊடக செயற்பாட்டாளர்கள் வெகுவாக காணப்பட்ட மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் ஆகிய நகரங்களில் இப்போது தமிழ் ஊடகவியலாளர்கள் இல்லை. வடக்கு கிழக்கு பிரதேசங்களில் இயங்கிய ஊடக நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளன. அதேபோல் அநேக ஊடகவியலாளர்கள் அப்பிரதேசங்களிலிருந்து வெளியேறியுள்ளனர். ஊடகவியலாளர் திஸ்ஸநாயகம் மற்றும் ஏனையோர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளது இதுவரை வடக்கு கிழக்கின் நிலை நாட்டின் பிரதான நகரில் வசிக்கும் தமிழ் ஊடகவியலாளர்களுக்கு ஏற்படும் முன்னுதாரணமென சந்தேகிக்கத் தோன்றுகிறது.

எமது கூட்டமைப்பு ஊடகவியலாளர் திஸ்ஸநாயகம் மற்றும் ஜெசீதரன் தம்பதியினர் தொடர்பாக குற்றச்சாட்டு இருந்தால் அவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தும்படியும் இல்லாவிட்டால் அவர்களை உடனடியாக விடுவிக்கும்படியும் அரசைக் கேட்டுக்கொள்கின்றது.

இதேவேளை நாம் இலங்கை அரசை மேலும் கோருவதென்னவென்றால், ஊடகவியலாளர்களின் ஊடகத் துறையிலிருப்பவர்களின் மற்றும் அவர்களது குடும்பத்தினரது பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கும் படியும், ஊடக சுதந்திரத்தை நசுக்குவதற்காக இலங்கையில் முறையான கட்டத்துக்குள் இயங்கும் ஊடகங்களை குரலிழக்கச் செய்ய தேசிய பாதுகாப்பு மற்றும் அதற்கான தாக்கத்தையும் முன்வைக்கவேண்டாமெனக் கேட்டுக் கொள்கின்றோம். (அ-5)

## அகில இலங்கைப் பாடசாலைகளின் 25ஆவது ஆண்டு விளையாட்டு விழா

(கொழும்பு)

கல்வி அமைச்சினால் நடத்தப் படும் அகில இலங்கை பாடசாலைகள் விளையாட்டு விழாவின் 25 ஆவது வருட விழாவை கொழும்பில் நடத்த திட்டமிட்டுள்ளது.

வருடாந்தம் நடத்தப்பட்டுவரும் இவ் விளையாட்டு விழா இம்முறை கொழும்பு சுகததாச விளையாட்ரங்கில் நடைபெறவுள்ளது. மூன்று கட்டங்களாக இந்த விளையாட்டு விழாவை நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. முதல் கட்டப் போட்டி ஓகஸ்ட் 30-31 மற்றும் செப்டெம்பர் 1ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இரண்டாம் கட்டம் செப்டெம்பர் 13, 14, 15 ஆகிய மூன்று தினங்களில் இடம்பெறுகிறது. இறுதிக் கட்டமாக மெய்வல்லுநர் மற்றும் தட களப் போட்டி நிகழ்ச்சிகள் செப்டெம் பர் 24 ஆம் திகதி முதல் 28ஆம் திகதி வரையான ஐந்து தினங்களுக்கு நடைபெறவுள்ளது.

மெய்வல்லுநர் போட்டி நிகழ்ச்சி கள் உட்பட இறுதி நிகழ்வுகள் கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது. இந்த விளையாட்டுப் போட்டிக்கு தகுதி உடையவர்களை தெரிவு செய்யும் போட்டிகள் தற்போது நாடளாவிய ரீதியில் நடாத்தப்பட்டு வருகின்றது.

(அ-5)

## கிழக்கு மாகாணசபைத் தேர்தல்

## சுதந்திரக் கட்சிச் சின்னத்தில் போட்டியிட்டு வெற்றி பெற முடியுமா? - ஐ.தே.க. சவால்

(கொழும்பு)

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிச் சின்னத்தில் போட்டியிட்டு இயலுமாயின் வெற்றி பெறுமாறு ஐக்கிய தேசியக்கட்சி சவால் விடுத்துள்ளது. ஐக்கிய தேசியக்கட்சி கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடுவதால் அரசாங்கம் அச்சமடைந்துள்ளதாக அக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

பதுளை மாவட்ட ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினர்களிடையே உரையாற்றும் போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி போட்டியிடாது என்ற காரணத்தினாலேயேஅரசாங்கம் தேர்தலுக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டதாக அவர் குறிப்பிட்டார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தேர்தல் ஒன்றை நடத்துவதற்கான அமைதியான சூழ்நிலை நிலவாத காரணத்தினாலேயே உள்ளூராட்சி மன்றத்தேர்தலை தமது கட்சி பகிஷ்கரித்ததாக பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார். ஆயுதக்குழு ஒன்றிற்கு மட்டக்களப்பு மாவட்ட ஆட்சியை பெற்றுக்கொடுக்கும் நோக்கிலேயே அரசாங்கம் இந்தத் தேர்தலை நடத்தியதாகவும் அவர் கூறினார். கிழக்கு மாகாணசபைத் தேர்தல் தொடர்பாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் வெற்றியளித்ததாக அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

## தெரிந்த கதையும் தெரியாத அர்த்தமும்

ஓலைச் சுவடிகள் 05

### நம்பிக்கைகளும் ஆசாரங்களும்

### குளித்ததும் முதலில் முதுகைத்துடைக்க வேண்டும் என்பது ஏன்?

குளித்தபின் முதலில் முதுகைத்தான் துடைக்கவேண்டும் என்பது விதிமுறை.

இதில் நம்பத்தகுந்த சுவாரசியமான ஓர் விஷயம் அடங்கியிருக்கின்றது. நம் உடலில் எப்போதும் இரண்டு சூழ்நிலைகள் உள்ளன. நன்மையும் தீமையும். நன்மையென்ற ஸ்ரீ தேவியும் தீமையென்ற மூதேவியும். நாம் குளிப்பதற்காக தலையில் நீரூற்றும் போது ஸ்ரீ தேவியும் மூதேவியும் உடலிலிருந்து வெளியேறுகின்றனர். பின் தமக்குள் போராட்டம் நடத்திக்கொண்டிருக்கும் உடலில் யார் முதலில் திரும்ப நுழைய வேண்டும் என்பதற்கே இந்தப் போராட்டம். உடலில் எந்த பாகத்தில் முதலாவது ஈரம் துடைத்து சுத்தமாகின்றதோ அப்பாகத்தில் மூதேவி நுழைந்து விடுவது வழக்கம். ஏனென்றால் இப்போராட்டத்தில் வெற்றியடைவது தீமையான மூதேவியே. இரண்டாவது முகம் துடைத்தால் அங்கு ஸ்ரீ தேவி புகுந்து நாள் முழுவதும் நன்மை விளங்கும் முகத்துடன் வீற்றிருப்பாள். மாறாக முகத்தை முதலில் துடைத்தால் மூதேவி புகுந்து முகத்துடன் நாள் முழுவதும் கழிக்க வேண்டியது தான். அதாவது அன்றைய நாள் அம்போ! அதனால் முதலில் முதுகைத் துடைத்த பின் முகம் துடைக்கவேண்டுமென்ற போதனை பின் தலைமுறைகளுக்கு அளித்துள்ளனர் முன்னோர்கள்.

இதைக் கேட்டதும் மூட நம்பிக்கை என்று ஒதுக்கி விடாதீர்கள் இதற்குள்ளும் ஒரு உண்மை புதைந்திருக்கிறது. அதாவது குளிக்கும் போது நம் உடலின் எல்லா பாகங்களிலும் குளிர்பரவுகின்றது. மிக அதிகமான குளிர் அனுப்பப்படுவது முதுகிலாகும். முதுகெலும்பில் அதிகநேரம் குளிர் ஏற்கவேண்டி வந்தால் நோய்வாப்பட வாய்ப்புண்டு இதனால் உண்டாகும் தீங்கைத் தவிர்க்கவே குளித்தவுடன் முதுகைத்துடைக்க வேண்டு மெனக் கூறியுள்ளனர்.

## ...ன்னிக் களமுனைகளில் வைரஸ் தாக்கம் ...வைத்தியசாலைகளில் 500 படையினர்

...வன்னியில் பெய்துவரும் கடும் ...ழ காரணமாக இராணுவத்தினர் ...ரஸ் நோய்த் தாக்கங்களுக்கு ...ளாகியுள்ளதாக இராணுவப் ...ச்சாளர் பிரிகேடியர் உதய நாண ...க்கார தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் ...தரிவித்துள்ளதாவது,

வன்னியில் பெய்து வரும் கடும் ...மழை காரணமாக களமுனைகளில் உள்ள பெருமளவிலான படையி னர், சிக்குன்குனியா, டெங்கு போன்ற வைரஸ் நோய்த்தாக்கங் களுக்கு உள்ளாகியுள்ளனர்.

'இந்த நோய்த்தாக்கத்திற்கு உள்ளாகிய 500 இராணுவத்தினர் அநுராதபுரம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பில் அவசர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கைவிடப்பட்ட எறிகணைகளின் கொள்கலன்களில் அதிகளவான நுளம்புகள் பெருக்கமடைகின்றன எனவும் அவர் தெரிவித்தார். (ச-5)

## சிங்கப்பூருக்கு 25 டொலர்...

களுக்கு விற்பனை செய்யப்படும் பொருள்களின் விலையினை விட யாழ்ப்பாணத்தில் ஐந்து அல்லது ஆறு மடங்கு விலையில் அதிகரிப் புக் காணப்பட்டதாக பிரதம நீதிய ரசர் தெரிவித்துள்ளார்.

இந்தப் பொருள்களின் விலை அதிகரிப்புத் தொடர்பாக வர்த்தகர்க ளிடம்கலந்துரையாடியபோதுகொழும் பிலிருந்து சிங்கப்பூருக்கு ஒரு தொன் பொருள்களைக் கொண்டு செல்ல 25 டொலர்கள் செலவிடப் படுகின்றது என்றும் கொழும்பிலி ருந்து காங்கேசன்துறைக்கு ஒரு தொன் பொருள்களைக் கொண்டு செல்ல 75 டொலர்கள் செலவிடப் படுவதாகத் தெரிவித்துள்ளார்.

அவ்வாறான நிலையில் பொருள் களை எவ்வாறு விலைகுறைத்து விற்பனை செய்வதென வர்த்தகர் கள் தன்னிடம் கேட்டுக் கொண்ட தாக நீதியரசர் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக ஆராய்ந்தபோது கப்பல்களைச் சிலரே வைத்திருப் பதனால்தான் பொருள்களின் விலை கட்டுப்படுத்தப்படுகின்றது என்று தெரிவித்துள்ளார். (ச-2)

## கிழக்கு...

உருவாகும்.

வடக்குக் கிழக்கு இணை... பிரிப்பை அப்பகுதி மக்கள்தா... மானிக்க வேண்டும். அதற்... சாதகமான சூழல் வரும்போ... யுறுத்தப்படும் என்றும் கூ... ளார்.

தமது கட்சியில் இணை... போட்டியிட 5 இடதுசாரிக் கட்... முன்வந்துள்ளன. இவர்களு... இணைந்து செயற்படுவதன் ... சிங்கள மக்கள் மத்தியில் ... மக்களின் நியாயங்களை எடு... சொல்வதற்கு வாய்ப்பாக அ... என்று அவர் மேலும் தெரிவி... ளார்.

## இராமேஸ்வரம் மீனவர் ...

இதில் பல விசைப் படகுகள் தேசி யக் கடல் எல்லையைத் தாண்டி மீன் பிடித்தபோது அவ்வழியே வந்த இலங்கைக் கடற்படையினர் திடீரென துப்பாக்கிச் சூடு நடத்தி னர்.

இதில் தங்கச்சிமடத்தைச் சேர்ந்த ஸ்வீட்டர் என்பவரது படகு இயந் திரம் சேதமடைந்தது. இதையடுத்து மற்றொரு படகு உதவியுடன் சேத மடைந்த படகு இராமேஸ்வரம் துறை முகத்துக்குக் கொண்டு வரப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது. (ச-5)

## முல்லைத்தீவில் மூழ்கடிக்கப்பட்ட...

எனினும் ஏழு கடற்படையினர் தொடர்பாக எந்தத் தகவலும் கிடைக் கவில்லை.

அவர்களில் சிலர் விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்டிருக் கலாம் என்று கடற்படை தலைமை யகத்தைச் சேர்ந்த உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். எனினும் இத னை உறுதிப்படுத்த முடியவில் லை.

பெண் ஒருவரின் உடற்பகுதிக ளைக் கடந்த வியாழக்கிழமை கடற் படையினர் பருத்தித் துறையை அண்டிய கடற்பகுதியில் கண்டெடுத் துள்ளனர். இச் சடலம் டோறா மீது தாக்குதல் நடத்திய கரும்புலிகளின் ஒருவரினதாக இருக்கலாம் என்ற சந்தேகத்தைக் கடற்படையினர் வெளிப்படுத்தியுள்ளனர்.

பி-437 இலக்கமுடைய டோறாப் படகு, கடற்கண்ணிவெடியில் சிக்கி யதாக முன்னர் தெரிவிக்கப்பட்ட போது அது மனித டோப்பிடோ ரக வெடிகுண்டுத் தாக்குதலாக இருக்க லாம் என்ற சந்தேகங்கள் தற்போது வலுத்துள்ளன. எனினும் மூன்று கரும்புலிகளால் இயக்கப்பட்ட நீர் மூழ்கிக் கப்பல் அல்லது அலையு டன் பயணிக்கும் கலம் இத் தாக்குத லை நடத்தியிருக்கலாம் எனவும் கடற்படையின் உயர் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஆனால் இச் சம்பவத்தின்போது 45 நிமிடங்கள் கடற்சமர் நடைபெற் றதாக விடுதலைப்புலிகள் தெரிவித் துள்ளதாகத் தமிழ்நெற் இணையத் தளம் தெரிவித்துள்ளது. ஆனால் இதன்மூலம் தமது புதிய உத்திகளை மறைப் பதற்கு விடுதலைப்புலிகள் முயற்சித்துள்ளதாகக் கடற்படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மூழ்கடிக்கப்பட்ட டோறாவிலும் மற்றைய டோறாப் படகிலும் இருந்த கடற்படையினர் அங்கு கடற்சமர் நடைபெறவில்லை எனவும் அது தொடர்பான இலத்திரனியல் தகவல் கள் எதுவும் இல்லையெனவும் தெரிவித்துள்ளதும் சந்தேகத்தை வலுப்படுத்தியுள்ளது.

இத் தாக்குதல் நடைபெற்ற 24 மணிநேர த்தில் கடற்புலிகளுக்கும் கடற்படையினருக்கும் இடையில் திரியாய்க்கு வடக்குப் புறம் உள்ள கடற்பகுதியில் கடற்சமர் நடைபெற் றுள்ளது.

வட.-கிழக்குக் கடற்பகுதியில் தற்போது மோதல்கள் அடிக்கடி நடைபெற்று வருகின்றன. இத னைத் தொடர்ந்து வடக்கு மற்றும் கிழக்குப் பிராந்திய கடற்படைத் தள ங்கள் விழிப்பு நிலைக்கு உட்படுத் தப்பட்டுள்ளன.

மேலும் இஸ்ரேலுக்குச் சென்று ள்ள பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநா யக்க மற்றும் பாதுகாப்பு அமைச் சகத்தைச் சேர்ந்த இரு அதிகாரிகள் அங்குள்ள இராணுவ ஆயுத உற் பத்திநிறுவனத்திற்கும் சென்றுள்ளனர்.

இஸ்ரேல் ஏயரோஸ் பேஸ் இன் டஸ்றீஸ் எனப்படும் இந்த நிறுவ னம் டோறா அதிவே கத் தாக்குதல் படகுகள் மற்றும் ஆளில்லா உளவு வானூர்திகளைத் தயாரித்து வரு வது குறிப்பிடத்தக்கது என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## பதவி வெற்றிடங்கள் - 200...

பின்வரும் பதவிகளுக்கு மேலதிகமாக ஆட்களைச் சேர்க்கும் ...யில் பதவி வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன. விண்ணப்பிப்போ...

❖ 20-45 வயதிற்குட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.
❖ யாழ்.நகர மையத்திலிருந்து 7 கிலோமீற்றர் தூரத்திற்குள் ...பவர்களாக இருத்தல் கட்டாயமானதாகும்.

○ தமிழில் ரைப்பிங் செய்து கணனி பக்க அமைப்பாளர்கள்...
(ஆண்கள், பெண்கள்)
(நேர்முகத் தேர்வு 02.04.2008 பிற்பகல் 2.30 மணி)
○ ஒப்புநோக்குநர்கள்
(இருபாலாரும், ஆண்கள் இரவுக் கடமை)
○ அலுவலகச் செய்தியாளர்
(ஆண்கள்)
(நேர்முகத் தேர்வு 03.04.2008 பிற்பகல் 2.30 மணி)
○ பிரதேச செய்தியாளர்கள்
வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம், தீவகம்
(நேர்முகத் தேர்வு 04.04.2008 பிற்பகல் 2.30 மணி)
○ ஓவ்செற் இயந்திர இயக்குநர்கள், பயிலுநர்கள்
(ஆண்கள்)
(நேர்முகத் தேர்வு 05.04.2008 பிற்பகல் 2.30 மணி)
○ பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்
○ சிற்றூழியர்கள்
(நேர்முகத் தேர்வு 06.04.2008 பிற்பகல் 2.30 மணி)
தகுதியுடையவர்கள் குறித்த திகதிகளில் நேரில் வரவும்.

இல.3,2 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

நிர்வாக உத்தியோகத்...
வலம்புரி

## விடுதலைப்புலிகளுடன் இணைந்தாவது...

அலரி மாளிகையில் நேற்று நடைபெற்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 18-வது மாநாட்டில் உரை யாற்றும்போதே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது,

கிழக்கில் இரட்டை வேடம் பூண்டு மட்டக்களப்பு உள்ளூராட்சிச் சபைத் தேர்தலைப் புறக்கணித்தோர் கிழக் கில் போட்டியிடுவதற்கு முயற்சிக் கின்றனர்.

விடுதலைப்புலிகளுடன் இணைந்தாவது கிழக்குத் தேர்தலில் வெற்றி பெற வேண்டும் என ஐக் கிய தேசியக் கட்சி எதிர்பார்க்கின் றது. கிழக்கு புலிகளிடமிருந்து மீட் கப்பட்டதை அந்த மக்கள் மறக்க மாட் டார்கள் என நான் நம்புகின்றேன்.

கிழக்கை மீட்டு அங்கு மீண்டும் ஜனநாயகத்தை ஏற்படுத்தியுள் ளோம். அந்தப் பொறுப்பை திறம் பட செய்திருக்கின்றோம். எனினும் இன்றுவரை அந்த நடவடிக்கை தொடர்பாக பலர் பல்வேறு முறைக ளிலும் குற்றஞ்சுமத்துகின்றனர்.

எனினும் கிழக்கில் முன்னெடுக் கப்படுகின்ற அந்த நடவடிக்கையை ஒருபோதும் கைவிடப் போவதில் லை. கிழக்கு மக்களுக்கு இன்று சுதந்திரம் கிடைத்துள்ளது.

பொருள்களின் விலைகள் குறி த்து பேசுகின்றபோது கொழும்பை விடவும் கிழக்கில் பொருள்களின் விலை மிகவும் குறைவு. புலிகளின் நடவடிக்கை கிளிநொச்சி; முல்லைத் தீவு ஆகிய இரு மாவட்டங்களுக் குள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த புரிந்துணர்வு ஒப்பந்தத் தின் மூலமாக புலிகள் சுதந்திரமாக ஆயுதங்களைக் கொண்டு வருவ தற்கான வழி சமைக்கப்பட்டது. அதன் மூலம் அங்கு பிறிதொரு அரசாங்கம் இருப்பதாக பிரித்துக் கொண்டனர்.

எனினும் எமது படையினர் முன் னோக்கிச் சென்று கொண்டிருக்கின் றார்கள் என்பதை படைத் தரப்பு அதிகா ரிகளுடன் நடத்தப்பட்ட சந்திப்பில் தெரி ந்து கொண்டேன்.

கொரியப் படையினருக்கு வாரத்தில் ஒருதடவையேனும் குளிப்பதற்கு நேரம் கிடைத்தது. எனினும் எமது படையின ருக்கு 3 மாதத்திற்கு ஒருதடவைதான் நேரம் கிடைப்பதாக அந்த அதிகாரிகள் என்னிடம் தெரிவித்தனர்.

இவ்வாறு முழு வாழ்க்கையையும் அர்ப்பணிக்கின்ற படையினரின் நட வடிக்கை குறித்துச் சிலர் விளங்கிக் கொள்வதில்லை. வடக்கிற்கு கொண்டு செல்லப்படும் வெற்றியை தடுத்து நிறு த்துவதே ஐக்கிய தேசியக் கட்சியின் நோக்கமாகும்.

அதனால் இங்கு குழப்பத்தை ஏற் படுத்தி வடக்கில் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளை சீர்குலைப்பதற்கு முய ற்சிக்கின்றார்கள். இந்தநாட்டில்மனித உரி மைகள் மீறப்படுவதாக சர்வதேசத்தின் முன்கொண்டு செல்கின்றார்கள்.

கிடைக்கின்ற நிதியுதவிகளைத் தடுத்து நிறுத்த பிரசாரம் செய்கின் றார்கள். இவற்றுக்கு முகம் கொடுத்து நாட்டைக் கட்டி எழுப்புவதற்கு நாம் அனைவரும் கை கோர்க்க வேண்டும் என்றார். (ச-5)






## மரண அறிவித்தல்

### திருமதி இரத்தினம் பொன்னம்...

(முன்னாள் ஆசிரியை)

நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் நிரந்தர வதிவிடமா... சிறுப்பிட்டி வடக்கைத் தற்போதைய வதிவிடமாகவும் கொண்... தினம் பொன்னம்மா அவர்கள் நேற்று (30.03.2008) க... னார்.

அன்னார் காலஞ்சென்ற சோமசுந்தரம் தம்பதிகளின் அ... புதல்வியும், காலஞ்சென்ற கதிரவேலு தம்பதியரின் அன்பு ம... ளும், அமரர் கதிரவேலு இரத்தினத்தின் அன்பு மனைவியும்... மலர் (பாக்கியம், முன்னாள் ஆசிரியை), அமரர் வேலாயுத... யோரின் அன்புச் சகோதரியும், மாலா (ஆசிரியை, சிறுப்பிட்டி ... பாடசாலை), அகிலா (ஆசிரியை, கரந்தன் இராமுப்பிள்ளை... யாலயம்), நித்திலா (சுவிஸ்), சிவானந்தராசா (ஜேர்மனி), கிரு... தன் (சுவிஸ்), பவானந்தன் (லண்டன்), கசிகலா (கொழும்... யோரின் பாசமிகு தாயாரும்,

மகேந்திரன் (இலங்கை மின்சார சபை, யாழ்ப்பாணம்), ... சேகரம் (அப்பன்), கருணாநிதி (சுவிஸ்), சற்குமாரி (ஜேர்மன்)... ராதா (சுவிஸ்), கிரிஜா (லண்டன்), வசீதரன் (கணக்காளர், கொ... ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார். அன்னாரின் ஈமக்... கள் சிறுப்பிட்டி வடக்கிலுள்ள அவரது இல்லத்தில் நாளை 01.04... காலை 9 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியை... நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்ல...

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ... வரும் ஏற்றுக் கொள்ளவும்.

கலைவாணி சனசமூக
நிலைய வீதி,
சிறுப்பிட்டி வடக்கு,
நீர்வேலி.
060 221 6648

தகவல்;
ஆ.மகேந்திரன்
(இலங்கை மின்சார சபை, யாழ்ப்...
செ.சந்திரசேகரம்
(அப்பன்)

(c-941)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.2 இரண்டாம் ஒழுங்கை பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 31.03.2008 இல் அச்சிட்டுவெளியிட...